# வருடாந்த அறிக்கை 2013

# வருடாந்த அறிக்கை - 2013

**உள்ளடக்கம்** **பக்க எண்**


| | | |
|---|---|---|
| 1.0 | நோக்கு | 1 |
| 2.0 | சேயற்பணி | 1 |
| 3.0 | பிரதான நோக்கங்கள் | 1 |
| 4.0 | நிறுவன கட்டமைப்பு | 2 |
| 5.0 | பிரிவுச் செயற்பாடுகள் | |
| 5.1 | ஆலோசனை பிரிவு | 6 |
| 5.2 | அபிவிருத்திப் பிரிவு | 10 |
| 5.3 | நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் பயிற்சிப் பிரிவு | 16 |
| 5.3.1 | இயக்குனர் பயிற்சிப் பிரிவு | 17 |
| 5.3.2 | நிருமாண இயந்திர சாதனப் பயிற்சி அலகு | 22 |
| 5.4 | பயிற்சிப் பிரிவு | 28 |
| 5.4.1 | வதிவிட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மையம் | 31 |
| 5.5 | மனித வள மற்றும் நிருவாகப் பிரிவு | 37 |
| 5.6 | நிதிப் பிரிவு | 39 |
| 6.0 | நிர்மாணம் பயிற்சியளிப்பு அபிவித்திக்கான நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீது 1971இன் 38ம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை. | 66 |

## 1.0 நோக்கு

" நம்பகமானதும் உலகளாவிய மட்டத்தில் போட்டிக்குரியதுமான நிர்மாணக் கைத்தொழிற்றுறை யொன்றை இலங்கையில் தோற்றுவித்தல்."

## 2.0 செயற்பணி

" நிலைபேறான தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற விதத்தில் நிர்மாணக் கைத்தொழிற்றுறையின் மூல வளங்களின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் தர நியமங்களை மேம்படுத்தி தேசத்திற்கான இயக்கத்திறன் மிக்க தொழில் துறையையும் நம்பகமான பெறுமானங்களை சேர்க்கின்ற சேவைகளையும் உறுதிப்படுத்தல்."

## 3.0 பிரதான நோக்கங்கள்

**ICTAD** இன் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

- அபிவிருத்தி நோக்கங்களில் தேசியக் கிராக்கிகளை நிறைவேற்றுவதில் நிர்மாணக் கைத்தொழிலின் பங்கெடுப்பினை மேம்படுத்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலில் துறையில் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டை சாதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் பங்காளர்களுக்கு மூலோபாயத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

செயற்பாடுகளின் பிரதான துறைகள் பின்வருமாறு:

- நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கான மூலோபாயங்களைச் சிபாரிசு செய்வதுடன், அவற்றின் அமுலாக்கத்திற்கு உதவி புரிதல்;
- ஒப்பந்ததாரர்களையும் ஆதன விருத்தியாளர்களையும் பதிவு செய்தல். அவர்களின் நிதி, நிருவாக மற்றும் சந்தைப்படுத்தல் ஆற்றலளவுகள் அடிப்படையில் தரப்படுத்தலை நிர்ணயம் செய்தல்;
- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசகர்களின் உயர்தொழிலுக்குரிய தரத்தை மேம்படுத்தல். நிர்மாணக் கைத்தொழிலில் உயர் தொழில் சார் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிருமாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு பிற அமைப்புக்களுக்கு உதவுதல்;
- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசனை சேவைகளின் ஏற்றுமதிக்காக உதவி நல்குதலும் உற்சகமளித்தலும் மேலும் உள்ளூர் ஒப்பந்தாரர்களுக்கு கடல் கடந்த நாடுகளில் நிர்மாண வேலைகள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;
- நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்;
- நிர்மாணக் கைத்தொழிலின் மனித வளத் தேவைகளை மதிப்புரைப்பதுடன், பயிற்சி வசதிகளின் ஏற்பாட்டிற்கு உதவி அளித்தல்
- நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளணியினரினதும் அமைப்புக்களினதும் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்துவத்தின் உயர் தரத்தை மேம்படுத்தல்;
- நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான விடயங்கள் மீதான ஆராய்ச்சியை மேம்படுத்தல் அல்லது மேற்கொள்ளுதல்;
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தியை மேம்படுத்துவதுடன் உதவி நல்குதல்;
- நிர்மாணக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கு தேவையான பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அல்லது உதவி அளித்தல்;

## 4.0 தாபனம்

### அறிமுகம்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது (ICTAD) நிருமாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. இது பணிப்பாளர் சபையின் தலைவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது.

### முகாமைத்துவச் சபை

| பெயரும் தனிப்பட்ட முகவரியும் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திரு.அநுர தஸநாயக்க<br>இல. 81/6,கந்தகெட்டிய கார்டன்ஸ்,<br>கொஸ்வத்த வீதி, கிரிவத்துடுவ. | தவிசாளர் | 2013-05-30 |
| திரு. சுசில் சமந்த குமாரசிங்க<br>மே/பா. பால் குளிரூட்டும் நிலையம்,<br>வரையறுக்கப்பட்ட மில்கோ தனியார் நிறுவனம்,<br>இரக்காமம் வீதி,<br>அம்பாறை. | செயற்பாட்டுப் பணிப்பாளர் | 2012-09-10 |
| பட்டய கணிய மதிப்பீட்டாளர்<br>திரு.ஹேமன்த அபோன்சு<br>இல.45/பீ, பாடசாலை வீதி,<br>நாவலை. | உறுப்பினர் | 2013-02-19 |
| கட்டிடக் கலைஞர்<br>திரு. என்.எம்.பி. நவரத்ன<br>26/9 ஏ, 1 ஆம் ஒழுங்கை, ரம்பார்ட் வீதி, எதுல் கோட்டை. | உறுப்பினர் | 2013-05-20 |
| திரு.ஜயசிறி சமரதுங்க<br>இல. 162, கண்டி வீதி<br>தளுகம,<br>களணி. | உறுப்பினர் | 2013-05-20 |
| தேசமான்ய எஸ்.பி. லியனாரச்சி<br>இல. 547, அகுரேகொட வீதி,<br>தலங்கம தெற்கு,<br>பத்தரமுல்லை. | உறுப்பினர் | 2013-05-20 |
| திரு எச்.ஆர்.வீ.பி. விஜேவர்தன<br>இல 7ஏ, பலபோவ,<br>தேவாலபொல. | உறுப்பினர் | 2013-06-15 |

**முன்னாள் பணிப்பாளர் சபை**

| பெயரும், தனிப்பட்ட விலாசமும் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திரு. உதுல பண்டார அவுசதஹாமி<br>இல. 71, திகன கிராமம்,<br>ரஜவெல்ல. | தவிசாளர் | 2010-05-24 |
| பொறி.என். ரூபசிங்க<br>இல.57, மகாவலி வீடமைப்புத் திட்டம்,<br>பள்ளேகெல,<br>குண்டசாலை. | உறுப்பினர் | 2010-05-24 |
| திரு. அஜித் அபேசேகர<br>513/26, பசன் மாவத்த,<br>அரவ்வல மேற்கு,<br>பண்ணிப்பிட்டிய. | உறுப்பினர் | 2010-05-24 |
| பொறி. என். நிஸ்ஸங்க விஜேரத்ன<br>இல. 465, காலி வீதி, ராவத்தாவத்தை,<br>மொறட்டுவை. | தவிசாளர் | 2009-07-14 |
| திரு.கே.எல்.சமரசிங்க<br>இல. 46/23, லேடி லவினியா, 1ஆவது<br>குறுக்குத் தெரு, பன்சலை வீதி,<br>கல்கிஸ்சை. | உறுப்பினர் | 2009-02-25 |
| பொறி. பேரா. ஏ.கே.டபிள்யு ஜயவர்தன<br>இல.14, விஜேராம ஒழுங்கை,<br>தேவானந்த வீதி,<br>நாவின்ன,<br>மஹரகம. | உறுப்பினர் | 2007-12-07 |
| தேசபந்து சுரத் விக்கிரமசிங்க<br>இல.108 B, ஹோட்டன் பிளேஸ்,<br>கொழும்பு 07. | உறுப்பினர் | 2007-12-07 |
| திரு.டபிள்யு.எ.கே.எஸ். டீ அல்விஸ்<br>107/1 D, தலதாவத்த வீதி, தல்பிட்டிய,<br>வாதுவை. | உறுப்பினர் | 2007-12-07 |
| பேரா. ரமீஸ்டீன்<br>இல 21 1/3, மெஜஸ்டிக் அப்பார்ட்மன்ட்,<br>புகையிரத நிலைய வீதி,<br>கொழும்பு – 06. | உறுப்பினர் | 2007-12-07 |
| திரு.ஜயசிறி சமரதுங்க<br>இல. 162, கண்டி வீதி, தலுகம,<br>களனி. | உறுப்பினர் | 2007-12-07 |
| பேரா. சித்ரா வெடிக்கார<br>இல. 31 A, அல்பேர்ட் பிளேஸ்<br>தெகிவளை. | உறுப்பினர் | 2007-12-07 |

பணிப்பாளர் சபையின் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் ICTAD தனது பணியினை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகள் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ) ஆலோசனைப் பிரிவு
ஆ) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு
அ) நிர்மாண இயந்திர சாதன சேவைகள் பிரிவு
ஈ) பயிற்சிப் பிரிவு

தவிசாளரின் பொதுவான உத்தரவுக்கு உட்பட்ட வகையில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தினது ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவர். நிருவாக விடயங்கள் நிர்வாக விடங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் நிதிசார் அலுவல்கள் நிதி விடயங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் செயற்பாட்டுப் பிரிவுகளாக இயங்குகின்றன. (பிரிவுகளின் செயற்பாடுகளைக் காட்டும் அட்டவணையைத் தயவு செய்து பார்க்கவும்).

## 5.0 பிரிவுரீதியான செயற்பாடுகள்

**தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை**

**தொழிற்படு பணிப்பாளர்**

**பணிப்பாளர் நாயகம்**

- நிருமாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு — பணிப்பாளர் (அபிவிருத்தி)
- ஆலோசனைச் சேவைகள் பிரிவு — பணிப்பாளர் (ஆலோசனை)
- நிருமாணச் சாதனப் பயிற்சிப் பிரிவு — பணிப்பாளர் (CET)
- பயிற்சிப் பிரிவு — பணிப்பாளர் (பயிற்சி)
- நிருவாகப் பிரிவு — பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)
- நிதிப் பிரிவு — பிரதிப் பணிப்பாளர் (நிதி)

உள்ளகக் கணக்காய்வாளர்

### நிருமாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

**செயற்பாடுகள்:**
1. வகுத்தமைத்தலும், கைத்தொழில் அபிவிருத்தியும்
2. தொழில்நுட்ப அபிவிருத்தி

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. செய்முறை மேம்பாடு
2. நடைமுறை மேம்பாடு
3. கொள்கை ஆலோசனை
4. ஒப்பந்தக்காரர் அபிவிருத்தி
5. ஆலோசகர் அபிவிருத்தி
6. கொள்கையைக் கண்காணித்தல்
7. பொருள் அபிவிருத்தி
8. தொழில்நுட்பம்
9. கணனி வசதிகளைப் பராமரித்தல்
10. மென்கணனிய அபிவிருத்திலிலும், சோதித்தலிலும் பிரிவுகளுக்கு உதவியளித்தல்

### ஆலோசனைச் சேவைகள் பிரிவு

**செயற்பாடுகள்:**
1. நிருமாணப் பொறியியலும், கணக்காய்வும், கணனிச் சேவைகளும்
2. ஒப்பந்தம் தொடர்பான தகவலின் மேம்பாடு / இணைப்பு/ பரப்புதல்

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. நிருமாணப் பொருளியல் புள்ளிவிபர, தரவுத் தளம்
2. தொழில்நுட்பக் கணக்காய்வுகள
3. ஒப்பந்த இணக்கம்
4. தகவல் நிலையத்தை நடத்துதல்
5. இக்டாட்'டின் ஆவணங்களை வெளியிடுதலும், மொழிபெயர்ப்பைக கவனித்தலும
6. 'இக்டாட்'டின் பிரசாரத் திட்டங்களை இணைத்தல்
7. சஞ்சிகை, செய்திக் கடிதம், வருடாந்த அறிக்கையை வெளியிடுகல்

### நிருமாணச் சாதனப் பயிற்சிப் பிரிவு

**செயற்பாடுகள்:**
1. நிருமாணச் சாதனங்களின் செயற்படுத்தல்,பராமரிப்பில் நிபுணத்துவப் பயிற்சியின் ஏற்பாடு
2. நிருமாணச் சாதனங்கள் தொழிற்படுதல், பராமரிப்பில் நிருமாண ஆளணியினரின் மனிதவள அபிவிருத்தி .

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. பொறியாளருக்கும், இயக்குனருக்குமான நிபுணத்துவப்பயிற்சியின் ஏற்பாடு
2. பயிற்சியின் வசதியளிப்பு
3. நிறுவகரீதியானதொழில் அபிவிருத்தி
4. இ.பொ.ஆளணியினருக்கான பயிற்றுனர் பயிற்சி

### பயிற்சிப் பிரிவு

**செயற்பாடுகள்**
1. நிருமாணக் கைத்தொழில் ஆணையாளரின் மனித வள அபிவிருத்தி

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. ஒப்பந்தக்காரர், கைவினைஞர், மேற்பார்வையாளர்கள், முகாமையாளர்கள், முகாமையாளர்களின் பயிற்சியின் வசதியளிப்பு
2. நிறுவகரீதியானதும், தொழில்சார்பானதுமான அபிவிருத்தி
3. மனித சக்திஆய்வுகளும், நிறுவகரீதியான தகவலும்
4. நிருமாணக்கைத்தொழில் பயிற்றுனர் பயிற்சி
5. நிபுணர் வாடிக்கையாளர் வடிவமைப்பாளர் பயிற்சி நிருமாண மேற்பார்வையாளர்களும், முகாமையாளர்களும்
6. கொள்கை அறிக்கை உள்ளீடுகள்

### நிருவாகப் பிரிவு

**செயற்பாடுகள்**
1. பிரிவுகளுக்கான ஆளணி, நிருவாகச் சேவைகளின் ஏற்பாடு
2. நூலகத்தின் பராமரிப்பு

### நிதிப் பிரிவு

**செயற்பாடுகள்**
1. பிரிவுகளுக்கான நிதி முகாமைத்துவச் சேவைகளின் ஏற்பாடு

## 5.1 ஆலோசனைச் சேவைகள் பிரிவு

### வழங்கப்பட்ட சேவைகள்

எழுத்து மூலமோ அல்லது தொலைபேசி ஊடாகவோ அல்லது நேரடியாகவோ சமூகமளித்து பிரிவுக்கு செய்யப்படுகின்ற வேண்டுகோளின் பேரில் ஒப்பந்தக்காரர்கள், ஆலோசகர்கள், வாடிக்கையாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்ற நிர்மாணக் கைத்தொழிலின் பங்காளர்களுக்கு பின்வரும் சேவைகளை ஆலோசனைச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது:

1. நிர்மாண கைத்தொழிலுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
    - நிர்மாணப் பணிப் பெறுகை நடவடிக்கைகள் மற்றும் நிர்மாண ஆலோசனை சேவைகள் தொடர்பான அறிவுரைகள்.
    - ஒப்பந்த நிருவாகம் மற்றும் பிணக்குகள் மீதான ஆலோசனை.
    - உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கத்தின் காரணமாக ஆகுசெலவின் மீள்நிரம்பல் மற்றும் ICTAD சூத்திர முறையின் பிரயோகம் தொடர்பாக அறிவுரைகளை வழங்குதல்.
    - கட்டிட வேலைகளுக்கான அளவீட்டு முறை மீதான ஆலோசனை (SLS 573)
    - கோரல்களைக் கையாள்வதில் சுதந்திரமான கருத்துக்களை வழங்குதலும் ஆலோசனைகளை வழங்குதலும்.
    - ICTAD நியம கூறு விலையிடல் ஆவணங்கள், விபரக்கூற்றுக்கள், ஆலோசனை ஆவணங்கள் ஆகியன தொடர்பாக ஆலோசனை அறிவுரை வழங்குதல்.
2. பிணக்கின் தன்மையைப் பொறுத்து பிணக்குகளை தீர்ப்பதற்காக வசதியளித்தல் / மத்தியஸ்தம் செய்தல் மற்றும் மத்தியஸ்தர்களை பதவிக்கமர்த்தல்.
3. மாதாந்தம் நிர்மாணப் புள்ளிவிபரங்களின் ICTAD விபரக்கூற்றை வெளியிடுதல்.
4. தெரிவு செய்யப்பட்ட சிறிய அளவிலான கருத்திட்டங்கள் மீதான கருத்திட்ட முகாமைத்துவம், ஆலோசனைச் சேவைகள் மற்றும் சுதந்திரமான அறிக்கைகள் ஆகியவற்றின் ஏற்பாடு.
5. ICTAD நியம கூறு விலையிடல் ஆவணங்கள், ICTAD சூத்திர முறை மற்றும் வேறு ஏற்புடைய வெளியீடுகள் என்பவற்றை வெளியிடுதல் / மீளாய்தல் / மொழிபெயர்த்தல்.
6. தகவல்களைப் பரப்புவதற்கும் அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கும் பொருத்தமான கருப்பொருள்களில் கருத்தரங்குகளை நடத்துதல்.

### 5.1.1 நிருமாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனைச் சேவையை வழங்குதல்

கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்த நிருவாகம், தகராறு மீதான தீர்மானம், ICTAD சூத்திரமுறை, ICTAD நியம கூறுவிலை ஆவணங்களின் விவரக் கூற்றுக்கள் ஆகியவை தொடர்பான அறிவுரைகளை ஆலோசனைச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது. இந்த இலவச சேவைகள் பிரிவுக்கு 2013 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் எனப் பலரும் மாதாந்தம் சுமார் 280 பேர் அளவில் நேரடியாக வருகை தந்தும் தொலைபேசி மூலமும் எழுத்து மூலமும் கோரிக்கைகளை முன்வைத்தனர். சம்பந்தப்பட்ட தரப்பினரால் கோரப்பட்ட விடயங்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பின்வரும் நிறுவனங்களுக்கு நிபுணத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன

- வரையறுக்கப்பட்ட கல்விசார் ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கம்
- பெட்கா கன்ஸ்ட்ரக்ஷன்
- அணு சக்தி அதிகாரசபை

### 5.1.2 பிணக்கின் தன்மையைப் பொறுத்து பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வசதியளித்தல் / மத்தியஸ்தம் செய்தல், மத்தியஸ்தர்களை நியமித்தல் / பதவிக்கமர்த்தல்

ஒப்பந்த ஆவணங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் ஆகியன தொடர்பான ஒப்பந்தப் பிணக்குகளுக்கு முகம்கொடுக்கும் ஒரு தொகை ஒப்பந்தக்காரர்கள் இப்பிரிவிலிருந்து ஆலோசனைகளைக் கோரினர். சில சம்பவங்களில், பிணக்குடன் தொடர்பு பட்ட தரப்பினர்கள் வரவழைக்கப்பட்டு தீர்வொன்றை அடையு முகமாக அவர்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் மத்தியஸ்தம் வகிக்கப்பட்டு தீர்க்கப்பட்பட்ட முக்கிய பிணக்குகள்.

- பஸ் தரிப்பிடம் நீர்கொழும்பு
- தேசிய சேமிப்பு வங்கி (NSB) நிர்மாணப் பணிகளுக்கான ஆலோசனை
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- இலங்கை டென்னிஸ் சங்கம்
- ரம்புக்கனை பஸ் தரிப்பிடம்
- புலமைச் சொத்து விற்பனை நிலைய புனர்நிர்மாணம்

2013 ஆம் ஆண்டின் போது, ஒப்பந்தத்திற்கான தரப்புக்களின் வேண்டுகோளின் பேரில் 12 மத்தியஸ்தர்களை ICTAD நியமித்தது. (தயவு செய்து பின்னிணைப்பை பார்க்க) ICTAD மத்தியஸ்தர் குழுவின் முக்கியத்துவம் கருதி அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. “ICTAD மத்தியஸ்தர் குழு ” ஐ நிறுவுவதற்கு தேவையான மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 37 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மத்தியஸ்தர் குழுவின் பெயர் பட்டியல் டிசம்பர் மாதத்தில் ICTAD இன் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டது.

### 5.1.3 கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்

தொழில்நுட்பம் சாரா அரச துறை நிறுவனங்கள் தமது நிர்மாண கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை இப்பிரிவினால் பெற்றுக்கொண்டுள்ளன. பெறுகை நடைமுறைகள் (கூறு விலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்ததாரர்களை மற்றும் ஆலோசகர்களை தெரிவு செய்தல் மற்றும் கிடைக்கப்பெற்ற கூறு விலை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்) ஒப்பந்த நிருவாகம் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான சிபாரிசுகள் போன்ற சேவைகள் இதனுள் அடங்கும்.

சேவைகளைப் பெற்றுக்கொண்ட முக்கிய நிறுவனங்கள்,

- இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
- மத்திய சூழல் கருத்திட்டம்
- தகவல் திணைக்களம்
- பாவனையின் பின்னரான தேசிய பிளாஸ்திக்கு கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் (2 கருத்திட்டங்கள்)

- கடுவளை மாநகர சபை
- மாத்தறை மாநகர சபை

- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்
- காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

### 5.1.4 நிருமாணப் புள்ளிவிபரங்களின் ICTAD விவரத் திரட்டினை மாதாந்தம் வெளியிடுதல்

முன்னைய ஆண்டுகளைப் போலவே மாதாந்தம் வெளியிடப்படும் ICTAD நிர்மாணப் புள்ளிவிபரங்களின் விவரத்திரட்டுக்கள் 12 வெளியிடப்பட்டன. இவ்விபரத் திரட்டுக்காக பொருட்களின் விலைகள், சரீரஉழைப்பு வேதனங்கள், பொறிகளின் கேள்வுக் கட்டணங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பகுப்பாயப்பட்டன. வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோருக்கு சுமார் 1804 எண்ணிக்கையிலான விவரத்திரட்டுகள் மாதாந்தம் விற்பனை செய்யப்பட்டன. ஒப்பந்தக் கருத்திட்டங்களில் உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுவதற்கு சுட்டிகள் பயன்படுத்துகின்றன.

### 5.1.5 ICTAD வெளியீடுகளின் மீளாய்வு / வரைவு

நிர்மாணக் கைத்தொழிலுக்கான ICTAD வெளியீடுகளை மீளாய்வதற்கும் புதிய வெளியீடுகளை வெளியிடுவதற்குமான பணியானது தொழில் நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்டுள்ள ICTAD வெளியீடுகளை முன்னெடுக்கும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ICTAD வெளியீடுகளை மீளாய்தல், புதிய ஆவணங்களை வெளியிடுவதற்கான துறைகளை அடையாளம் காணல், ICTAD வெளியீடுகளை மீளாய்வதற்கு / புதுப்பிப்பதற்கு உப குழுக்களை நியமித்தல் மற்றும் அதனை ICTAD பணிப்பாளர் சபைக்கு சிபாரிசு செய்தல், ICTAD வெளியீடுகள் தொடர்பான இதழ்களை மீளாய்தல் / வரைதல், வளவாளர்களை அடையாளம் காணல், அவற்றை அங்கீகரித்தல் என்பவற்றுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதும் வெளியீடுகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதும் முன்னெடுத்தல் குழுவின் பணிகளாகும்.

புதிய ஆவணங்களை வரைதல் / நடைமுறையிலுள்ள ஆவணங்களை மீளாய்தல், வளவாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுகளை மீளாய்தல் மற்றும் இறுதி வரைவுகளை சிபாரிசுகளுக்காக முன்னெடுத்தல் குழுவுக்கு சமர்ப்பித்தல் மற்றும் வளவாளர்களுக்கு புதிய ஆவணங்களை வரைவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற பணிகளுக்காக வேண்டி முன்னெடுத்தல் குழுவினால் உப - குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டின் போது இரண்டு புத்தகங்கள் திருத்தம் செய்யப்பட்டதுடன் ஒரு புதிய ஆவணம் வரைவு செய்யப்பட்டது.

- ICTAD/DEV/16 - கொண்கிரீட் தட்டுக்ககளை உறுதியாக வார்ப்பதற்கான விவர வரையறை
- ICTAD/DEV/17 - சிவில் பொறியியல் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பான தளப் பரிசோதனைக்கான விவர வரையறை
- ICTAD/ADV/01 - ICTAD நிறுவனத்தினால் பட்டியல்படுத்தப்பட்டுள்ள தீர்ப்பாளர்களுக்கான வழிகாட்டல்கள்

### 5.1.6 கருத்தரங்குகளை நடத்துதல்

பின்வரும் கருப்பொருள்களில் 04 கருத்தரங்குகளை இப்பிரிவு நடாத்தியது.

- தொழில் சார்ந்த ஒழுக்கங்கள் பற்றிய கருத்தரங்கு ( 2013 மே 30)
- ICTAD விலை தளம்பல் சூத்திரங்கள் தொடர்பான கருத்தரங்கு (2013 யூன் 11)
- நிர்மாண உரிமைக் கோரல்கள் மற்றும் பிணக்குத் தீர்மானங்கள் ( 2013 ஆகஸ்ட் 2)
- நிர்மாண அபாயமும் காப்புறுதியும் ( 2013 டிசம்பர் 3)

### 5.1.7 பிணக்குத்தீர்வு தொடர்பான பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

மத்தியஸ்தம் வகிப்பதற்கு முன்னர் மாற்று பிணக்குத் தீர்வு நடைமுறையொன்றாக ICTAD நியம கூறுவிலை ஆவணங்களில் "தீர்ப்பாளரை" ICTAD அறிமுகப்படுத்தியது. ஒப்பந்தம் நடந்து கொண்டிருக்கும் வேளையிலேயே விரைவான தீர்வொன்றைப் பெறுவதே இதன் மறைமுகமான நோக்கமாகும் . ICTAD நியம கூறுவிலை ஆவணங்களின் பிரகாரம் வேலைகள் மற்றும் ஒப்பந்த ஆவணங்களின் பொருள் விளக்கம் ஆகியன தொடர்பிலான அனுபவத்துடனான வாழ்க்கைத் தொழில் புரிபவராக மத்தியஸ்தர் விளங்க வேண்டும்.

பிணக்குத்தீர்வு தொடர்பான பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் ஆசியான் பிராந்தியத்திலிருந்து கோரப்பட்டது. இரண்டு முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. மலேசிஷியாவின் மஸ்தியஸ்தர்கள் பட்டய கிளை நிறுவனத்திற்கு (CIArb) 2013 நவம்பர் 22 ஆம் திகதி ஆலோசனைப் பணி கையளிக்கப்பட்டது.

### 5.1.8 மையப் பூங்கா அமைத்தல்

கட்டுமான தொழில்நுட்பப் பூங்கா நிகழ்ச்சித்திட்டம் ICTAD நிறுவனத்தினதும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினதும் NERDC நிறுவனத்தினதும் ஒன்றிணைந்த திட்டமொன்றாகும். 2013 ஆம் ஆண்டு புதிய கட்டிட (வர்த்தக கூடாரம், கல்விக் கூடாரம், உணவு மேடை) நிர்மாணிப்புப் பணிகள் SEC நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டு 2014 மார்ச் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

## 5.2 அபிவிருத்திப் பிரிவு

### 5.2.1 நிருமாண ஒப்பந்தக்காரர்களுக்கு தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டம்

ஏதாவது குறிப்பான ஒப்பந்தத்திற்கு தொடர்பு இன்றி கருத்திட்டங்களின் வேறு விதமான வகைகளையும் அளவுகளையும் பொறுப்பேற்பதற்கான அவர்களது பொதுவான தகுதியை நிர்ணயிப்பதற்காக உத்தேசமான ஒப்பந்தக்காரர்களின் ஆற்றலளவுகளுக்கான ஒரு திரையிடும் நடைமுறையாகவே பதிவும் தரப்படுத்தலும் விளங்குகின்றன. ஒப்பந்தக்காரரின் தொழில் நுட்ப மற்றும் நிதிசார் நிலையைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவும் தரப்படுத்தலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் 551 எண்ணிக்கையிலான புதிய பதிவுகள் வழங்கப்பட்டன, 337 ஒப்பந்தக்காரர்கள் தரமுயர்த்தப்பட்டனர். 651 ஒப்பந்தக்காரர்களது பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் [பிரதான (கட்டிட மற்றும் சிவில்), விசேட (மின் - பொறிமுறை), விசேட (முடிவுறுத்தல் மற்றும் வேறு விசேட வேலை)] பதிவுக்கான வழிகாட்டல்கள் கைத்தொழில் நிபுணர்களின் குழுக்களினால் முன்வைக்கப்பட்டுள்ள இறுதி வழிகாட்டல்கள் மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பிரதான நிர்மாணக் கைத்தொழில்களுடன் தொடர்புடைய அனைத்து பிரிவுகளினதும் பதிவுக் கட்டண திருத்தங்கள் 2012 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (கட்டிடங்கள் மற்றும் சிவில் பொறியியல்) C – மின்னியல் மற்றும் எந்திரவியல் - EM மற்றும் முடிவுறுத்தல் - F . இக்கட்டண திருத்தங்கள் அமுலுக்கு வருவதனூடாக அனைத்து பிரிவுகளினதும் செல்லுபடிக் காலம் 2 வருடத்திலிருந்து 3 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அறிவு வளர்ச்சிக்காகவும் விழிப்பூட்டல்களுக்காகவும் நடாத்தப்படுகின்ற கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றில் கலந்து கொள்கின்றவர்களுக்கு பதிவு நடவடிக்கையின் போது தொடர் தகுதி வளர்ச்சிக்கான புள்ளி வழங்கும் திட்டமொன்று ஒப்பந்தக்காரர்களின் நலன் கருதி இக்டாட் முகாமைத்துவ சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2013 சனவரி மாதம் முதல் செயல்படும் வண்ணம் C1 தொடக்கம் C5 வரையிலான தரங்களுக்கான பதிவின் போது தொடர் தகுதி வளர்ச்சிக்கான புள்ளிகளை கட்டாயப்படுத்துவதற்கும் சபை தீர்மானித்துள்ளது.

**ஒப்பந்தக்காரர்கள் (Online) தொடரறா முறையில் இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளும் முறையும் ஆவணப் பாதுகாப்பு திட்டமும்**

இத்திட்டம் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து அமுல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டம் திறைசேரியின் நிதி வழங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிர்மாண துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இம்முறையை பின்பற்றுவதனூடாக பயணங்களுக்காக செலவிடுப்படுகின்ற காலத்தையும் அதற்காக செலவிடுகின்ற பணத்தையும் சேமிக்க முடியும்.

காகிதாதிகளின் பயன்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தலுக்கான செலவினங்களை குறைத்துக்கொள்ளவும் இவ் ஆவண பாதுகாப்பு முறையின் உதவி நாடப்படுகின்றது. இத்திட்டம் வருடம் பூராவும் அதன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

### 5.2.2 நிருமாணத் திறமைக்கான ICTAD விருதுகள்

நிர்மாணத்துறையில் உயர்தொழில்சார் பண்பினையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த விருது வழங்கும் திட்டமொன்று 1990 ஆம் ஆண்டில் ICTAD இனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. நிர்மாண முகாமைத்துவத்தில் முதன்மையான செயற்றிறன், தொழில்நுட்ப நிபுணத்துவம், தரத்திலும் உயர்தொழில் தன்மையின் உயர் மட்டம், புத்தாக்கத்திறனுக்குரிய பொருத்தமான தொழில்நுட்பத்தின் அறிமுகம், பயிற்சியில் கைவினைஞர்களின் பங்கெடுப்பு ஆகியவற்றை இவ் வெகுமதித் திட்டம் அங்கீகரிக்கின்றது.

2013 ஆம் ஆண்டின் போது 23 வேலைத்தள தரிசிப்புக்களும் / குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஆண்டின் இறுதியில் 5 முன்வைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செய்யப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவை ICTAD உம் NCASL உம் கூட்டாக சேர்ந்து ஏற்பாடு செய்ததுடன் சுகததாஸ உள்ளக அரங்கில் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

**நிருமாணத்துறை சிறப்பு விருதுகள் - 2013**
**வெற்றியாளர்கள் - கட்டிடக் கருத்திட்டங்கள்**

| வருடம் | விருதின் வகை | கருத்திட்டமும் வெற்றியாளரும் |
|---|---|---|
| 2013 | சிறப்பு விருது | நிருவாகக் கட்டிடத் தொகுதி - செத்சிறிபாயா கட்டம் II செத்சிறிபாய வளாகம், பத்தரமுல்லை.<br>மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| | சிறப்பு விருது | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி திட்டம் கட்டம் 1- நிருவாகக் கட்டிடத் தொகுதி<br>மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| | சிறப்பு விருது | சென்டாரா பாசிகுடா ரிசோர்ட் என்ட் ஸ்பா, பாசிக்குடா.<br>துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| | திறமை விருது | சாயா பே ஹொடெல் பேருவல - பேருவலை.<br>சர்வதேச நிர்மாண கூட்டமைப்பு (பிறைவட்) லிமிடட் |
| | திறமை விருது | டாக்டர். நெவில் பெர்னாந்து ஸ்ரீ லங்கா - ரஷ்ய நட்புறவு போதானா வைத்தியசாலை, மாலபை.<br>ஆர்.என். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| | திறமை விருது | ஹிக்கடுவை கலாசார நிலையமும் சுனாமி ஆய்வு மையமும் (சுனாமி ஞாபகார்த்த நூாதனசாலை) கட்டம் 1 பெரேலிய, ஹிக்கடுவை.<br>ஸ்ரீபாலி கன்ட்ரக்டர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| | திறமை விருது | செலின்கோ லைபின் செலின்கோ கிளை அலுவலக கட்டிடம், கம்பஹா.<br>சதுட்ட பில்டர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| | பாராட்டுச் சான்றிதழ் | கலப்பு அபிவிருத்தி வதிவிட கட்டிடத் தொகுதி, தெஹிவலை.<br>எல்.எச். பியசேன என்ட் கம்பனி (பிறைவட்) லிமிடட் |

**நிர்மாணத்துறை செயற்றிறன் விருது**
**சிவில் பொறியியல் கருத்திட்டங்களுக்கான விருதுகள்**

**வகை I – பெறுமதி ரூபா 1000 மில்லியனுக்கு மேல்**

| | கருத்திட்டம் | ஒப்பந்தக்காரரின் பெயர் |
|---|---|---|
| 1 | அம்பாந்தோட்டையில் வளவை ஆற்றின் குறுக்கே குடியிருப்பு அணைக்கட்டொன்றின் நிர்மாணிப்பை நிறைவு செய்தல். ஒப்பந்த இலக்கம் : SB/UWS/PB2/HAM/ICB | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ |
| 2 | கொழும்பு வடக்கு நகரங்களின் நீர் வழங்கல் திட்டம் - கட்டம் II மஹர மற்றும் பியகம நீர் வழங்கல் திட்டங்கள் ஒப்பந்த இலக்கம் : WSDP/TNC/C2 | சியெரா கன்ஸ்ட்ரக்ஷன் (தனியார்) கம்பனி |
| 3 | வடக்கு வீதி இணைப்புத் திட்டம் (NRCP) புனரமைப்பும் மேம்பாடும் B437 வீதி வெல்லாய் தொடக்கம் அராலை வரை (0+000 km-27+400 km) | கேடீஏ வீரசிங்க என்ட் கம்பனி (பிறைவட்)லிமிடட் |
| 4 | கண்டி - யாழ்ப்பாண வீதி (A009) 63 கி.மீ வீதிப் புனரமைப்பும் மேம்பாடும் 257 ஆம் கிமீ தொடக்கம் 320 ஆம் கிமீ வரை ஒப்பந்த இலக்கம்: RDA/NRRP/CGF/CIB | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 5 | பரந்தன் - முல்லைத்தீவு வீதிப் புனரமைப்பு (A035) உப ஒப்பந்த வேலைகள் 25+5 கிமீ 00.00Km தொடக்கம் 30.00 Kmவரை ஒப்பந்த இலக்கம்: RDA/NRIP/PRP1/C11 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 6 | தோணிகல தொடக்கம் கல்கமுவ வரை (A009) வீதிப் புனரமைப்பும் மேம்பாடும் (98+000 Km – 122+170 Km) ஒப்பந்த இலக்கம்:RDA/NRCP/ICB/ADB/CP-02 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 7 | நாவற்குலி தொடக்கம் கரைதீவு இறங்குதுறை வரை (A032) வீதிப் புனரமைப்பும் மேம்பாடும் (00+000 Km – 17+400 Km) ஒப்பந்த இலக்கம்: RDA/NRCP/ICB/ADB/CP-04 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |

**வகை II – பெறுமதி ரூபா 500 - 1000 மில்லியனுக்கு இடைப்பட்டவை**

| | | |
|---|---|---|
| 8 | அம்பேபுஸ்ஸ - குருநாகல் - திருக்கோணமலை வீதி (A06) புனரமைப்பும் மேம்பாடும் 157+000 Km தொடக்கம் 167+280 Km வரை மற்றும் கந்தளாய் தொடக்கம் கன்தலாவ வீதி (B196) | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ |
| 9 | அம்பேபுஸ்ஸ - குருநாகல் - திருக்கோணமலை வீதி (A06) புனரமைப்பும் மேம்பாடும் 167+280 Km தொடக்கம் 178+000 Km வரை ஒபபந்த இலக்கம்: WB/RSAP II/KT/02 | துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| 10 | உலக வங்கி நிதியுதவி மாகாண வீதி அபிவிருத்தித் திட்டம். ஊவா மாகாணம், கடன் இலக்கம் 4630 LK தொகுப்பு “A” ஒப்பந்த இலக்கம் : Uva-04 - ஹக்கலை - போர்ட் - | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |

| | | |
|---|---|---|
| | மெக்டொனல்ட் வீதி | |
| 11 | ஹக்மன - பெலியத்த - தங்காலை வீதி புனரமைப்பும் மேம்பாடும் பிரிவு 11+500 Km தொடக்கம் 19+140 Kmவரை<br>ஒப்பந்த இலக்கம் : RDA/RNIP/PRP1/CIA-1 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 12 | அனுராதபுரம் தொடக்கம் ரம்பேவ வரையிலான A020 வீதி புனரமைப்பும் மேம்பாடும் (0+0000 Km – 14+500 Km)<br>ஒப்பந்த இலக்கம் : RDA/NRCP/ICB/ADB/CP-03 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 13 | மனிப்பாய் தொடக்கம் கைத்தடி வரையிலான வீதி புனரமைப்பும் மேம்பாடும் (0+000 Km – 14+020 Km)<br>ஒப்பந்த இலக்கம் : RDA/NRCP/ICB/ADB/CP -05 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 14 | மாங்குளம் தொடக்கம் முல்லைத்தீவு வரையிலான வீதி புனரமைப்பும் மேம்பாடும் (0+000 Km – 13+000 Km)<br>ஒப்பந்த இலக்கம் : RDA/NRCP/ICB/ADB/CP-07 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |

**வகை III – பெறுமதி ரூபா 100 - 500 மில்லியனுக்கு இடைப்பட்டவை**

| | | |
|---|---|---|
| 15 | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் வீதி அபிவிருத்தி திட்டம் நிலை 1<br>ஒப்பந்த இலக்கம் : ENCPRP/NCB/EPBP/02 | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ |
| 16 | கொழும்பு துறைமுகத்தின் புதிய வடக்கு பியரில் அமைந்துள்ள கொள்கலன் தளத்தின் (UCT) அவசர சீரமைப்பு | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ |
| 17 | முருங்கன் தொடக்கம் மன்னார் வங்காலை வரையிலான நீர் பரிமாற்றல் திட்டத்திற்கு HDPE, DI குழாய்களை வழங்கல் மற்றும் பொருத்துதல்.<br>ஒப்பந்த இலக்கம் : P&D/C,N/ADB 5/2010/01 | கேடீஎ வீரசிங்க என்ட் கம்பனி (பிறைவட்) லிமிடட் |
| 18 | கோட்டை பாராளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு பாதுகாப்பான நுழைவு வீதியின் 1/1 இலக்க பாலம் விஸ்தரிப்பு | சீஎம்எல் - எம்டிஇ கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடட் |
| 19 | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் வீதி அபிவிருத்தி திட்டம் நிலை 1 பொதி EP - 03<br>ஒப்பந்த இலக்கம் : ENCPRP/NCB/EP/03 | வீவீ கருணாரத்ன என்ட் கம்பனி |
| 20 | மோதலினால் பாதிக்கப்பட்ட வலயத்துக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் அவசரத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நீர் வழங்கல் திட்டத்தின் கட்டிடப் பணிகள் பிரிவு B ( நீர் வழங்கல் திட்டம்)<br>ஒப்பந்த இலக்கம்: P&D/C,N/ADB/CARE/PP/2010/01 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 21 | போபே சந்தி - கிரிஇப்பன்ஆர - உடமாவர வரையிலான வீதி புனரமைப்பும் மேம்பாடும் 0+000 Km தொடக்கம் 8+500 Km வரை<br>ஒப்பந்த இலக்கம்: RDA/RNIP/PRP1/CIA-2 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |

**வகை IV - பெறுமதி ரூபா 100 மில்லியனுக்கு மேல்**

| | | |
|---|---|---|
| 22 | தெமலவாடிய அம்பான ஓப்பல்கல வீதி புனரமைப்பு ஒப்பந்த இலக்கம்: ENDRP-07 | காமினி கன்ஸ்ட்ரக்ஷன் |

**புத்தாக்க தொழில்நுட்பம் / கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்பட்ட நுட்பங்கள்**

| | | |
|---|---|---|
| 23 | கொழும்பு துறைமுகத்தின் புதிய வடக்கு பியரில் அமைந்துள்ள கொள்கலன் தளத்தின் (UCT) அவசர சீரமைப்பு | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சீ |
| 24 | முன்மொழியப்பட் 5 மாடி வர்த்தக கட்டிடத்திற்கு பைல் அமைத்தலும் அத்திபாரம் இடலும் | சொயில் டெக் (பிறைவட்) லிமிடட் |

**பசுமைக் கட்டுமான விருதுகள்**

| வருடம் | விருதின் வகை | கருத்திட்டமும் வெற்றியாளரும் |
|---|---|---|
| **2013** | சிறப்பு விருது | ஹற்றன் நெஷனல் வங்கி, நிட்டம்புவ கிளை - துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| | சிறப்பு விருது | CECB தலைமை அலுவலகம் - கட்டம் II பொறியியல் பணிகள் மத்திய ஆலோசனைப் பணியகம் |

### 5.2.3 வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்தல்

வீடமைப்பு நிர்மாணக் கைத்தொழில் அமைச்சு, NCASL மற்றும் ICTAD ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட பூர்வாங்க விசாரணைக் குழாமொன்று ஒப்பந்தாரர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்

| விளக்கம் | 2013 பிணக்குகள் | % |
|---|---|---|
| ICTAD நிறுவனத்தின் தகவலுக்காக மாத்திரம் | 20 | 43% |
| ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விளக்கம் கோரலும் அவர்களினால் வழங்கப்பட்ட பதில்களும் | 17 | 36% |
| தீர்க்கப்பட்டவைகள் | 8 | 17% |
| ICTAD நிறுவனத்துடன் தொடர்பற்றவை | 2 | 4% |
| மொத்தம் | 47 | 100% |

### 5.2.4 ICTAD சஞ்சிகை – 2013

2013 ஆம் ஆண்டுக்கான ICTAD சஞ்சிகை விருது வழங்கும் வைபவத்தில் வெளியிடப்பட்டது. நிர்மாண கைத்தொழிலின் தர விடயங்கள் தொடர்பான தகவலை பரப்புவதே சஞ்சிகையின் பிரதான நோக்கமாகும். நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு பயனுள்ள கட்டுரைகளையும் தகவலையும் சஞ்சிகை வழங்குகின்றது.

இந்த வருடத்திலும் பங்காளர்களினாலும் புத்திஜீவிகளினாலும் வழங்கப்பட்ட மிக உயர்ந்த ஆதரவும் அர்ப்பணிப்பும் காரணமாக ICTAD வரலாற்றின் 3 ஆவது தடவையாகவும் சர்வதேச மத்தியஸ்த சஞ்சிகையொன்றாக திகழ்ந்தது.

### 5.2.5 ICTAD இன் கணனி முறைமை

பின்வரும் மிக முக்கிய பகுதிகளுக்கு கவனம் செலுத்தப்பட்டு கணனி முறைமையும் இணைய தளமும் திருப்திகரமாகப் பராமரிக்கப்பட்டன.

1. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களின் இணையத் தளம் ஊடான தொடரறா பதிவு நடைமுறையை நிறைவு செய்தல் ( C1, C2 மற்றும் C3 க்காக புதுப்பித்தல்)
2. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கான இணையத் தளம் ஊடான தொடரறா கொடுப்பனவு முறைக்கான திட்டத்தை ஆரம்பித்தல்
3. அபிவிருத்திப் பிரிவின் ஆவணப் பாதுகாப்பு திட்டத்தை அறிமுகம் செய்தல்
4. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கான இணையத் தளம் ஊடான தொடரறா கண்கானிப்பு கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்
5. இணையத் தளம் ஊடான தொடரறா பதிவு நடைமுறைக்கு வசதியளிக்கும் வகையில் ICTAD நிறுவனத்துக்கு ஒரு சில புதிய கணனிகள், பெக்ஸ் இயந்திரம் மற்றும் புகைப்படப் பிரதியெடுத்தல் இயந்திரங்கள் சேர்க்கப்பட்டன.
6. ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகளையும் சுமூகமாக கொண்டு செல்ல தேவையான கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

### 5.2.6 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடுகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள்

இவ்வாண்டின் போது பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

1. நிர்மாணக் கைத்தொழிலில் சுகாதாரமும் தொழில் ரீதியான பாதுகாப்பும் தொடர்பான செயலமர்வு – 2013 மார்ச் 23 ஆம் திகதி
2. நிர்மாணக் கைத்தொழிலில் புதிய வரிவிதிப்புக்கள் தொடர்பான கருத்தரங்கு – 2013 மே 27 ஆம் திகதி
3. பசுமை நிர்மாணத்துறைக்கான மிகவும் சுத்தமான பொருட்கள் உற்பத்தி தொடர்பான செயலமர்வு – 2012 செப்டம்பர் 07 ஆம் திகதி

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தகவலைப் பரப்புவதும் மற்றும் வருமான தோற்றுவிப்பை அதிகரிப்பதும் இந்த கருத்தரங்குகளை / செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கமாக உள்ளது

## 5.3 நிர்மாண இயந்திர சாதனப் பயிற்சிப் பிரிவு

நிர்மாண உற்பத்தித்திறனில் அளவிடக்கூடிய அதிகரிப்பொன்றைச் சாதிப்பதற்காக நிர்மாண கைத்தொழிலில் தகுதிவாய்ந்த நிருமாணச் செயற்பாடு ஒன்றை உருவாக்கு வதற்காக நிருமாணச் சாதனங்களின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியன மீது தோச்சிகளையும் அறிவையும் பகிர்வதே நிர்மாண இயந்திர சாதனப் பிரிவின் (CET) நோக்காகும்.

நிர்மாண இயந்திர சாதனப் (CET) பிரிவின் நோக்கங்கள் வருமாறு:

1. நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் தமது தொழில்களை செயற்றிறனுடனும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை மேம்படுத்தல்.
2. நிர்மாண இயந்திர சாதன மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ ஆளணியினர் தமது தொழில்களைச் செயற்றிறமையாகவும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை முன்னேற்றுதல்.
3. நிர்மாணத்துறையின் கிடைப்புத் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் பழுதுபார்த்தல் ஆகுசெலவை குறைத்து நேரத்தைக் மீதப்படுத்தும் முகமாக நிர்மாண சாதனங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் பொருத்தமான தடுப்பு பராமரிப்பு செயல்முறைகளை விருத்திசெய்தலும் அமுல்படுத்தலும்.
4. நிர்மாணக் கைத்தொழிலினுள் பிரவேசிக்க உத்தேசிக்கும் நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் முறைமையான அடிப்படைப் பயிற்சியை வழங்குதல்.
5. நிர்மாணச் சாதன பயிற்சி நிலையத்தின் (CETRAC) மாதிரி வேலைத்தளத்தில் அவசியமான பயிற்சியை வழங்குவதன் மூலமும் நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிலையங்களின் நியமத்தை மேம்படுத்துவதன் மூலமும் கைத்தொழிலுக்கு உதவியளித்தல்.
6. இலங்கை நிர்மாணச் சாதன பொறிமுறையாளர்களினதும் இயக்குனர்களினதும் சீவியத் தொழிலின் சமூக அங்கீகரிப்பை மேம்படுத்தல்.

இயக்குனர் பயிற்சி நிலையம் (OTC) மற்றும் நிர்மாணச் சாதன பயிற்சி நிலையம் (CETRAC) ஆகிய இரு அலகுகளை ICTAD இன் இயக்குனர் இயந்திர சாதனப் பயிற்சிப் பிரிவு கொண்டுள்ளது.



### 5.3.1 இயக்குனர் பயிற்சி அலகு

**நோக்கு**

" நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தேவையான திறமையுள்ள உழைப்பாளர் படையணி ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கில் நிர்மாணத்துறையுடன் தொடர்புற்ற செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறனையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதினூடாக அளவீடு செய்ய முடியுமான நிர்மாண உற்பத்தித் திறனை அடைவதே எமது இலக்காகும்."

**நோக்கங்கள்:**

- நிர்மாணத்துறை சார்ந்த இயந்திர உபகரணங்களை இயக்கும் நபருக்கு தேசிய மட்ட திறமைகளுக்கு ஏற்றாற் போல் பயிற்சி அளித்தல்
- இயந்திர உபகரணங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பான முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்துதல்
- நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் இயக்குனர்களுக்கான தேசிய தொழிற்றுறை தேர்ச்சிப் பரிசோதனைகளை நடாத்தல்
- ஒப்பந்த இயந்திரங்களை இயக்குகின்றவர்களின் திறனை அதிகரிப்பதினூடாக ஏற்புடைய பணிகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் நிறைவேற்ற முடியுமாதல்
- நிர்மாணப் பணிகளுக்காக இயந்தி உபகரணங்களை வாடகைக்கு விடுதல்

நகரி டிரக்டர்கள், சுமையேற்றிகள், தோண்டிகள், மோட்டார் தரப்படுத்திகள் போன்றவற்றின் பாதுகாப்பு, அடிப்படைப் பராமரிப்பு மற்றும் தொழிற்படுத்தல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடனான விசேட தொடர்புடன் நிர்மாண சாதனங்கள் மீதான பயிற்சியை இயந்திர சாதனப் பயிற்சி நிறுவனம் வழங்குகின்றது. 50 தொகுதிகளைக் கொண்ட நிர்மாண இயந்திர சாதனங்களையும் போதிய எண்ணிக்கையிலான பயிற்றுவிப்பு உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களையும் இயந்திர சாதனப் பயிற்சி அலகு கொண்டுள்ளது.



பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான திறமைகளைப் பகிர்வதற்கான செயன்முறைப் பயிற்சிக்காக பயிற்சி நேரத்தின் சுமார் 70% ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீதி 30% பயிற்சி நேரம் பாடபோதனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான செயல்முறைப் பயிற்சி வழங்கப்படும் அதேவேளை வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் நோக்கத்திற்காக சில நிர்மாணச் சாதனங்கள் கேள்வுக்கு விடப்படுகின்றன.

இயக்குனர் பயிற்சி நிலையத்தினால் (OTC) நடாத்தப்படும் பயிற்சிகள் நிறுவன ரீதியான பயிற்சிகளையும் தொழில் பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளன. ஒரு பயிற்சியாளன் ஆகக் குறைந்தது மூன்று மாத தொழிற் பயிற்சியையும் நிறுவன ரீதியான பயிற்சியையும் பூர்த்தி செய்த பின்னர் அவர் NVQ தகைமையைப் பெறுகின்றார். இயக்குனர் பயிற்சி நிலையம் (OTC) நிர்மாண

இயந்திர சாதன இயக்குனர்களுக்கான தேசிய வர்த்தக பரிசோதனைகள் மற்றும் NVQ பரீட்சைகளையும் நடாத்துவதற்கு NAITA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது இ.ச.ப.நி. (OTC) இல் நடத்தப்படுகின்றன:

1. பூர்வாங்கப் பயிற்சி

    1.1 அடிப்படை நிர்மாணச் சாதனங்கள் பராமரிப்பு

2. பயில்திறன் அபிவிருத்தி

    2.1 பாரமற்ற நிர்மாணச் சாதனங்கள்
    2.2 தொட்டி பாரவண்டி
    2.3 பண்ணை டிரக்டர் (புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது)
    2.4 பாதை ரோலர் (புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது)

3. மணல் நகர்த்தும் சாதன அடிப்படை மட்டிசைப்புகள்

    3.1 நகரி டிரக்டர்
    3.2 சக்கரத்திலான சுமையேற்றி
    3.3 மோட்டார் தரப்படுத்தி
    3.4 நீரியல் தோண்டி
    3.5 பின்வாரி ஏற்றி

4. சிறப்பு சாதனங்கள்

    4.1 நடமாடும் கிரேன்
    4.2 பொறி ஏற்றி இறக்கி
    4.3 முள் வாரி ஏற்றி

5. தொழில் தேர்வுகள்

    5.1 தேசிய தொழில் தேர்வுகள்

6. விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

    இ.ப.நி. இல் நடத்தப்படும் சகல பயிற்சி நெறிகளும் கட்டணம் அறவிடப்படும் பயிற்சி நெறிகள் என்பதுடன் இவற்றில் சில பாடசாலையை விட்டு விலகியோரினதும் தொழிலற்ற இளைஞர்களினதும் மத்தியில் உயர்வான கிராக்கியைக் ஏற்படுத்தியுள்ளன.

7. கருத்தரங்குகள் / செயலமர்வுகள்

OTC நிலையத்தினால் நடாத்தப்படும் நிர்மாண சாதனங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது திறன் தேர்வுகள் என்பன நிர்மாணக் கைத்தொழில் துறையில் கிராக்கியை ஏற்படுத்தியுள்ளன.

2013ஆம் ஆண்டுக்கான பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பயிற்சித் திட்டம் தொடர்பிலான சாதனைகளும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன **(தயவு செய்து அட்டவணையைப் பார்க்க)**

| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | திட்டமிடப்பட்டவை | | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| 1.0 | பூர்வாங்கப் பயிற்சி | | | | |
| | 1.1 நிருமாணச் சாதனங்களின் அடிப்படை பராமரிப்பு | 24 | 480 | 18 | 408 |
| 2.0 | பயில்திறன் அபிவிருத்தி | | | | |
| | 2.1 பாரமற்ற சாதனம் | 12 | 36 | 1 | 15 |
| | 2.2 டிரக்டர் | 12 | 36 | 1 | 1 |
| | 2.3 தன்னியக்க ரோலர் | 12 | 24 | 4 | 7 |
| | 2.4 தொட்டி பாரவண்டி | 12 | 12 | 2 | 2 |
| 3.0 | மண் அகற்றும் சாதனங்கள் அடிப்படை மட்டிசைப்புகள் | | | | |
| | 3.1 நகரி ட்ரக்டர் | 12 | 12 | 3 | 10 |
| | 3.2 சக்கரத்திலான சுமையேற்றி | 12 | 12 | 2 | 15 |
| | 3.3 மோட்டார் தரப்படுத்தி | 12 | 60 | 7 | 44 |
| | 3.4 நீரியல் தோண்டி | 12 | 60 | 9 | 63 |
| | 3.5 பின்வாரி ஏற்றி | 12 | 180 | 13 | 183 |
| 4.0 | நிபுணத்துவச் சாதனங்கள் | | | | |
| | 4.1 நடமாடும் கிரேன் | 12 | 36 | 4 | 10 |
| | 4.2 பொறி கொண்டுசெல்லி | 12 | 24 | 8 | 24 |
| | 4.3 முள் கரண்டி ஏற்றி இயக்கி | 12 | 24 | 5 | 15 |
| | மொத்தம் | 168 | 996 | 77 | 797 |





## இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுதல்

இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் மேலதிக சேவையொன்று இயக்குனர் பயிற்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பயிற்சி நிலையத்திற்கு மேலதிக வருமானம் கிடைக்கப்பெறுகின்றது. பயிற்சியை முன்னிலைப்படுத்தி கையிருப்பிலுள்ள இயந்திர சாதனங்களை கட்டுமானக் கைத்தொழிலுக்கான சேவை நோக்கத்தில் வாடகைக்கு விடப்படுகின்றன.

## நிர்மாண கருத்திட்டங்கள்

இயக்குனர் பயிற்சி நிலையம் இயந்திர சாதனங்களை இயக்கும் மற்றும் பணிகளை கையாளக்கூடிய அனுபவமுள்ள ஆளணியை கொண்டுள்ளது. இதன் காரணமாக அது ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணக் கருத்திட்டங்களை கையாளுவதற்கான தகுதியை தன்னகத்தே கொண்டுள்ளது. இது வருமான அதிகரிப்புக்கு துணைசெய்கின்றது. அத்துடன் மனிதவள அபிவிருத்திக்கும் விசேடமாக மாணவர்களின் “ தொழில் பயிற்சிக்கு” தேவைவான மானியங்களை வழங்குகின்றது. இந்த திட்டத்தினூடாக பயிற்சி பெறும் இயக்குனர்களுக்கு இயந்திரங்களை உபயோகிக்கும் பாரிய சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஏனெனில் அது இயந்திரங்களை மற்றும் ஆளணியை பயிற்சிக்காக ஒரே நேரத்தில் பயன்படுத்தும் போது மேலும் பிரயோசமாக நேரத்தை சேமிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

## ரொட்டவெவ புனர்நிர்மாணம்

இத்திட்டம் பக்கமூன பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டு இயக்குனர் பயிற்சி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு கருத்திட்டமாகும். இத்திட்டத்தின் பெறுமதி 2.8 மில்லியன் ரூபாவாகும். இது புதிதாக இணைந்துகொண்ட ஆளணியினருக்கு கருத்திட்டங்களை கையாளுவதற்கான அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தது.

### 2013ஆம் ஆண்டின் போது ஈட்டப்பட்ட வருமானம்

| தொழில் வகுதி | வருமானம் (ரூபா) |
|---|---|
| கருத்தரங்கு அறைகள் | 2,009.00 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12,040,562.00 |
| இயந்திரங்கள் வாடகை | 7,858,681.00 |
| தொழில் சோதித்தல் | 55,750.00 |
| இயக்குனர் அடையாள அட்டைகள் | 225,400.00 |
| நிர்மாண கருத்திட்டங்கள் (ரொட்டவெவ) | 2,312,488.00 |
| நானாவிதம் | 77,439.00 |
| மொத்தம் | **22,572,329.00** |

**மஹாபிமாணி 2013**

" மஹாபிமாணி 2013 " நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் கௌரவ அமைச்சர் விமல் வீரவன்ச அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்கம் என்பன இணைந்து ஒழுங்கு செய்தன.

CETRAC நிறுவனத்தில் நடைபெற்ற போட்டியில் சிறந்த நிர்மாண இயந்திர கைவினைஞர் தெரிவு செய்யப்பட்டார் அதன் போது இயக்குனர் பயிற்சி நிறுவனத்தின் (OTC) நீரியல் தோண்டி இயக்குனர் தெரிவு செய்யப்பட்டார்.

2013 ஆம் ஆண்டு டிசம்பர் 05 ஆம் திகதி சுகததாஸ உள்ளரங்கில் நடைபெற்ற வைபவத்தில் அதிமேதகு இலங்கை சனாதிபதியினால் அவர்களுக்கான விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

### 5.3.2. நிருமாண இயந்திர சாதனப் பயிற்சி அலகு

நிர்மாண இயந்திர சாதனப் பயிற்சி நிலையத்தின் பொறிமுறை பயிற்சி அலகானது (CETRAC) பத்தரமுல்ல, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தையில் 17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. நவீன நிருமாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மீது ஏதாவது பயிற்சி பாடநெறியை நடத்துவதற்கான முழு வசதிகளையும் CETRAC கொண்டுள்ளது. பொறிமுறை/சிவில் எந்திரவியலாளர்களுக்கும் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்களுக்குமான பயிற்சி நெறிகளும் CETRAC நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.







**5.3.2.1** CETRAC இன் பயிற்சித் திட்டங்கள் 1996 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2001 செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட காலத்தின் போது ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் CETRAC இன் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொறிமுறையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோருக்கு நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை CETRAC வழங்குகின்றது. அண்மையில் ICTAD இனால் CETRAC இல் கட்டிட சேவைகள் தொடர்பான பொறியியல் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டிட காற்றுச்சீராக்கல் முறைமை, கட்டிட மின்சார முறைமை, நீர் விநியோக வடிகால் முறைமை மற்றும் தீ பாதுகாப்பு முறைமை ஆகியனவே அவையாகும்.

**5.3.2.2 நிர்மாணக் கைத்தொழிலுக்கு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நெறிகள்**

இளைஞர்களின் தொழிலின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே விலகுபவர்களுக்கு அதிகளவு தொழில் முன்னிலைப் பயிற்சி நெறிகளை விருத்தி செய்வதற்கும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

அடிப்படை பொறிமுறையாளர் பயிற்சி நெறி (BM)

### 5.3.2.3 அடிப்படை பொறிமுறை பயிற்சித் திட்டம்

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடனான (NAITA) கூட்டு முயற்சியுடன் அடிப்படைப் பொறிமுறை பயிற்சித் திட்டம் நடத்தப்படுகிறது. இது மூன்று வருட பயிற்சிப் பாடநெறி என்பதுடன் CETRAC இல் 09 மாதங்களைக் கொண்ட நிறுவன ரீதியான பயிற்சியையும் தொழில் நிலையங்களில் 27 மாதங்களைக் கொண்ட நடைமுறைப் பயிற்சியையும் அடக்குகின்றது. இப்பயிற்சி நெறியை க.பொ.த. (சா/த) பரீட்சையுடன் பாடசாலையை விட்டு வெளியேறுவோர் பின்பற்றுவதற்கு தகுதிபெற்றவர்களாவர். வருடமொன்று 60 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். இப்பாடநெறியை வெற்றிகரமாக முடித்துக் கொள்ளும் பயிற்சியாளர்கள், NAITA இனால் நடத்தப்படும் தேசிய தொழில் சோதனைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவதுடன், 2 வருட சேவை அனுபவத்தை ஈட்டிய பின்னர் தரம் II பொறிமுறையாளராக தகுதியடைவர்.

இப்பயிற்சியாளர்களுக்கு NAITA இனால் மாதாந்தம் ரூபா 1,000/- கொடுப்பனவு செய்யப்படுவதுடன், அவர்களுக்கான இலவச இடவசதி, பாடநெறிச் சாதனங்கள், வேலைத்தள வசதிகள், சீருடைகள், பாதுகாப்புக் கருவிகள் ஆகியன பயிற்சிக் காலத்தின் போது வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் வேறுபட்ட தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 பயிற்சியாளர்கள் CETRAC இல் நிறுவனரீதியிலான பயிற்சியை மேற்கொள்வதுடன், அதன் மொத்தச் செலவினத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது ஆண்டு ஒன்றுக்கு அண்ணளவாக 10 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சகல முன்னாள் பயிற்சியாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயனுள்ள வகையில் தொழிலாற்றுகின்றார்கள். இவர்களில் சிலர் நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்களுக்கும் பராமரிப்புக்கும் தமது சொந்த வேலைத்தளங்களைத் தாபித்துள்ளார்கள்.

### 5.3.2.4 ஊழியர்களின் பயில்திறனைத் தரமுயர்த்துவதற்கான மேலதிகப் பயிற்சி நெறிகள்

நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறையாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் மற்றும் முகாமையாளர்களினதும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிப்பதற்காக மேலதிக பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்காக பயிற்சியாளரின் உள்ளெடுப்பு 12 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

### 5.3.2.5 கனிஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 2)

நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிறுவனங்களில் தொழில்புரியும் கனிஷ்ட பொறிமுறையாளர்களின் அறிவையும் பயில்திறன்களையும் புதுப்பிப்பதற்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரையிலான அனுபவம் அவசியமாகும். தமது ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 9 பயிற்சி நெறிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நீரியல் மற்றும் பொறிநுட்பவியல் போன்ற துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளதுடன் இத்துறைகள் மீது மேலதிக பாடநெறிகள் நடத்தப்படல் வேண்டும்.

### 5.3.2.6 சிரேஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 3)

சிரேஷ்ட பொறிமுறையாளர்களின் தொழில்நுட்ப அறிவையும் பயில்திறனையும் புதுப்பிப்பதற்காகவும் தவறுகளை கண்டறிவதிலும் சீரமைத்தலிலும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் இந்த உயர் மட்ட பயிற்சிப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறிமுறையாளர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டுள்ளார்கள். தமது பொறிமுறையாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து, ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 6 வேறுபட்ட துறைகளைக் கொண்டுள்ளது. நீரியல்கள், மற்றும் இயக்கத்திரனியல் போன்ற இந்த துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் மிகவும் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே, இத் துறைகளில் மேலதிக பாடநெறிகள் நடத்தப்படவேண்டியுள்ளன.




### 5.3.2.7 மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சித் திட்டம்

நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வையாளர்களின் அறிவை உயர்த்துவதற்காக மேற்பார்வை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

### 5.3.2.8 பொறியியலாளர்கள் / முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்

நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்படுத்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறியியலாளர்கள், வேலைத்தள முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பராமரித்தல் மற்றும் பயன்படுத்தல் ஆகியன மீது சிவில் பொறியியலாளர்களுக்கும், கருத்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்ப அறிவை நிருமாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்மாண இயந்திர சாதனங்களின் பழுதுபார்த்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறைய பொறியியலாளர்களுக்கும், முதல் வரிசை முகாமையாளர்களுக்கும் நிருமாணச் சாதனங்களின் பராமரிப்பு மீதான பயிற்சி நெறி தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.





### 5.3.2.9 களஞ்சிய / விநியோக / கருத்திட்ட பணியணியினருக்குமான பயிற்சித் திட்டங்கள்

வழமையாக நிருமாணக் கைத்தொழிலுக்காகப் பணியாற்றும் பெருமளவு களஞ்சிய / விநியோக கருத்திட்டப் பணியணியினர் தமது சம்பந்தப்பட்ட துறைகளில் முறைமையான பயிற்சியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. இது பலதரப்பட்ட தொழிற்படுத்தல் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இயந்திர சாதனப் பழுதுபார்த்தல் நிறுவனங்களின் தடையற்ற தொழிற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. இப்பயிற்சி தேவையைச் சமாளிப்பதற்கு இவ்விரு பயிற்சித் திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டன.

### 5.3.2.10 கட்டிடச் சேவைகள் பொறியியல் பயிற்சித் திட்டங்கள்

கட்டிடச் சேவைகள் பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள பொறியலாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் பெருமளவு திட்டங்களை CETRAC நடத்தியது.

வர்த்தகக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான இந்த கட்டிட சேவைகளை உள்ளடக்குவதற்காக ஒரு சில பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், காற்றுச் சீராக்கல், காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக, வடிகாலமைப்பு முறைமைகள் என்பனவே அவையாகும்.

### 5.3.2.11 வழமையாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் ஈட்டப்பட்ட அனுபவத்துடன் நாட்டில் மாற்றமடைந்து வரும் கிராக்கியைப் பூர்த்திசெய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கான பயிற்சி செயற்றிட்டங்களை இனம் கண்டு விருத்தி செய்ததினூடாக பயிற்சியில் பலதரப்பட்டதும், குறிப்பானதுமான கிராக்கிகளை CETRAC இனால் வெற்றிகரமாக ஈடுசெய்வதற்கு இயலுமாகியது.

| | பயிற்சி நெறிகள் | பதிவு செய்யப்பட்ட | | வெளியேறிய | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப் பாளர்களின் எண். |
| 01 | **பாடசாலையை விட்டு விலகியோர் (மட்டம் I)<br>அடிப்படை பொறிமுறை பயிற்சித் திட்டம்** | 6 | 156 | 2 | 41 |
| | **பயிற்சி பாடநெறிகள்** | இலக்கிடப்பட்டவிளைவு | | உண்மையான விளைவு | |
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| 02 | **கனிஷ்ட பொறிமுறையாளர்கள் (மட்டம் II)** | | | | |
| | டீசல் என்ஜின்களின் பராமரிப்பு | *1* | *15* | *1* | *26* |
| | நீரியல் முறைமைகளின் பராமரிப்பு –13M 22 | *1* | *15* | *2* | *38* |
| | டீசல் மின்பிறப்பாக்கிகளின் பராமரிப்பு - 13M 25 | *1* | *15* | *3* | *107* |
| | கடவுதல்கள், தடைகள், பிடி முறைமைகளின் பராமரிப்பு13-M26 | *2* | *30* | *1* | *11* |
| | தோரா மாற்றீடுகளினதும் செலுத்தல் முறைமைகளினதும் பராமரிப்பு –13 M 27 | *1* | *15* | -- | -- |
| | நிர்மாண இயந்திர சாதனத்தின் இயந்தி மற்றும் இலத்திரனியல் பராமரிப்பு - 13MT | *2* | *30* | *1* | *18* |
| | நீர் பம்பிகளினதும், அமுத்திகளினதும் பராமரிப்பு –13 WPC | *1* | *15* | *2* | *43* |
| | தன்னியக்க இலத்திரனியல் முறைமையின் பராமரிப்பு-13 M24 | *1* | *15* | *1* | *15* |
| | நிர்மாண இயந்திர சாதனங்களை சேர்விஸ் செய்தல் - 13 SCE | *2* | *30* | -- | -- |
| | நீரியல் முறைமைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தலும் பராமரிப்பம் | *1* | *15* | -- | -- |
| 03 | **சிரேஷ்ட பொறிமுறையாளர்கள் (மட்டம் III)** | | | | |
| | நீரியல், இயக்கத்திரனியல் முறைகளின் பராமரிப்பு –13 M32 | 1 | 15 | 2 | 28 |
| | தன்னியக்க மின்னியல் முறைகளின் பராமரிப்பு - 13 M34 | 1 | 15 | 1 | 18 |
| 04 | **பொறியியலாளர்கள்** | | | | |
| | நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்பாடு –13 CPM | 1 | 15 | -- | -- |
| | நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு –13CEM | 1 | 15 | -- | -- |
| 05 | **மேற்பார்வை** | | | | |
| | நிரமாண இயந்திர சாதனத்தின் பராமரிப்பு நீரியலிலும், செலுத்துகையும்- 13 SUP1 | 1 | 15 | -- | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாண இயந்திர சாதனத்தின் பராமரிப்பு இயந்திரமும், இயக்கத்த்திரனியலும் - 13 SUP2 | 1 | 15 | -- | -- |
| 06 | **துணைப் பணியணியினர்** | | | | |
| | மனித வள அபிவிருத்தி அடிப்படை பாடநெறி | 1 | 15 | 2 | 36 |
| | களஞ்சியப்படுத்தல் சான்றிதழ் பாடநெறி | 1 | 15 | 1 | 31 |
| | களஞ்சியப்படுத்தல் உயர் சான்றிதழ் பாடநெறி | 1 | 15 | 1 | 21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | **வழக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகள் (CET)** | | | | |
| | நடமாடும் கிரேன் இயக்குதல் | 1 | 10 | 2 | 8 |
| | கவருயர்த்தி இயக்குதல் | 1 | 10 | -- | -- |
| | கவருயர்த்தி இயக்குதல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 1 | 10 | 11 | 44 |
| | மின் பிரப்பாக்கிகளும் மோட்டர்களும் | 1 | 10 | -- | -- |
| | கனரக வாகனங்கள் பராமரிப்பு | 1 | 10 | -- | -- |
| 08 | **வழக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகள் (BSE)** | | | | |
| | விவர வரையறை மற்றும் பாதை அமைத்தல் நுட்பங்கள் | 1 | 20 | 1 | 24 |
| | கட்டிட குளிரூட்டல் முறைகளின் பராமரிப்பு | 1 | 20 | 1 | 34 |
| | **நீச்சல் தடாகங்கள் பராமரிப்பு** | **1** | **20** | **1** | **35** |
| | **மின்சார பொருத்தல்கள் பராமரிப்பு** | **1** | **20** | **1** | **41** |
| **09** | **கருத்தரங்குகள்** | | | | |
| | **மூலப் பொருட்கள், களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் விநியோக சங்கிலி முகாமைத்துவத்துவம் மீதான செயலமர்வு** | **1** | **100** | **2** | **166** |
| | **ஹைப்ரைட் வாகனங்களின் தொழில்நுட்பங்கள்** | **1** | **100** | **1** | **98** |
| | **ஆளணி முகாமைத்துவமும் தொழில் சட்டங்களும்** | **1** | **100** | **1** | **64** |
| | **பாதுகாப்பான வாகன ஓட்டல் மற்றும் ஒழுக்கங்கள் தொடர்பான செயலமர்வு** | **1** | **100** | **1** | **30** |
| | **பாதுகாப்பானதும் விஞ்ஞான ரீதியிலானதுமான வாகன ஓட்டல் தொடர்பான செயலமர்வு** | **1** | **100** | **4** | **296** |
| | **மின் பிரப்பாக்கிகளை இயக்குதலும் பராமரிப்பும்** | **1** | **100** | **2** | **176** |
| | **சரக்கு போக்குவரத்தும் வினைத்திறன்மிக்க கொள்வனவு முறைகளும்** | **1** | **100** | **2** | **152** |
| | **மொத்தம்** | | **1331** | **59** | **1560** |

**2013 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருடானம்**

| தொழில் வகுதி | வருமானம் (ரூ.மி) |
|---|---|
| பயிற்சி நெறிகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் | 12.95 |
| வேலைத்தள பழுதுபார்ப்புகள் மற்றும் ஏனைய வேலைத்தள பணிகளும் | 1.82 |
| வாடகைக்கு வழங்குதல் | 9.19 |
| **மொத்தம்** | 23.96 |

### 5.4 பயிற்சிப் பிரிவு

பயிற்சிப் பிரிவின் பிரதான நோக்கம் நிர்மாணத்துறை சார் பங்குதாரர்கள் நிலைபேறான அபிவிருத்திக்கு முக்கிய தேவையான திறனுள்ள மனித வளத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதாகும். மூன்று தசாப்த காலமாக தொடர்ந்திருந்த மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரான கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் நிர்மாணத்துறையில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிர்மாணத்துறையில் திறனுள்ள தொழிலாளர்களின் பற்றாக்குறையானது பாரியளவில் வளர்ந்துவரும் இத்துறையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

நிர்மாணத்துறையில் இளைஞர்கள் இணைந்துகொள்வதில் பாரிய சரிவு நிலை கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டு வருகின்றது. இந்த இளைஞர் தலைமுறையினர் சிறப்புத் திறன்கள் மற்றும் பயிற்சிகள் தேவைப்படாத முச்சக்கர வண்டி செலுத்துனர்களாகவும் பாதுகாப்பு ஊழியர்களாகவும் தொழில் புரிவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்ற உண்மையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

எனவே, பயிற்சிப் பிரிவு இதனைக் கருத்திற்கொண்டு இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் மற்றும் தனி நபர்களின் பயிற்சித் தேவையயை நிறைவேற்றும் பொருட்டு மூன்று மனித வள மட்டங்களில் அதாவது, முகாமைத்துவ மட்டம், மேற்பார்வை மட்டம் மற்றும் கைவினைஞர் மட்டம் என ஊழியர்களுக்கு பொருத்தமான பயிற்சி திட்டங்களை வருடம் தோறும் நடாத்தி வருகின்றது.

**2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்**

- ❖ அரசாங்க மற்றும் தனியார் துறையில் பெறுகை முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்களது முகாமைத்துவ அறிவையும் திறன்களையும் நாளதுவரைப்படுத்திக்கொள்ள 09 மாதங்களைக் கொண்ட “பெறுகை முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி” ஒவ்வொரு வருடமும் ICTAD நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 2013 பெப்ரவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரை நடாத்தப்பட்டது. அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பெறுகை மற்றும் ஒப்பந்த விடயங்களுக்கு பொறுப்பான 46 பேர் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டனர்.

- சிறிய மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்களின் முகாமைத்துவ அறிவை மேம்படுத்தும் நோக்கில் “ விலை மனு கோரல்” மற்றும் “ தள அளவீடும் மாதாந்த பற்றுச்சீட்டு தயாரித்தலும்” எனும் பயிற்சி நெறி பயிற்சிப் பிரிவினால் வருடம் தோறும் நடாத்தப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டு இந்தப் பாட நெறிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்பட்டது. இரு மொழிகளிலும் 18 பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. 457 ஒப்பந்ததாரர்கள் இப்பயிற்சி பாடநெறியில் கலந்து கொண்டனர்.

- நிர்மாணத்துறை நிறுனங்களின் வேண்டுகோளின் பேரில் பயிற்சிப் பிரிவு 03 குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அவர்களது தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பல்வேறுபட்ட வித்தியாசமான தலைப்புக்களில் ஏற்பாடு செய்தது. அரசாங்க மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த முகாமைத்துவ மட்டத்திலான 115 உறுப்பினர்கள் இப்பயிற்சி நெறியில் பங்குகொண்டனர்.

- “ விலை மனு மதிப்பீடு பற்றிய நடைமுறை அம்சங்கள்” மற்றும் ICTAD விலை தளம்பல் சூத்திரம் மற்றும் அதன் விண்ணப்பங்களும்” எனும் தலைப்புக்களின் கீழ் மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. கைத்தொழில் துறையைச் சேர்ந்த 325 நபர்கள் இவ்விரு கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டனர்.

- நிர்மாணத்துறையில் காணப்படும் கைவினைஞர்களின் கேள்வியை குறைக்கும் முகமாகவும் அவர்களுக்கு மத்தியில் பலதரப்பட்ட திறன்களை ஊக்குவிக்கும் பொருட்டும் பயிற்சிப் பிரிவினால் 4 நாட்களைக் கொண்ட பயிற்சி நெறி அம்பாறை மாவட்டத்திலுள்ள தச்சர்கள் மற்றும் மேசன்களின் நன்மைக் கருதி அம்பாறையில் நடாத்தப்பட்டது. நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள 157 மேசன்களும் தச்சர்களும் இப்பயிற்சி நெறியில் பங்கெடுத்தனர்.

- NVQ தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழைப் பெற்று தகுதிவாய்ந்த கைவினைஞராக மாறுவதற்வாக மூன்று RPL/NVQ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் குருநாகல் மாவட்டத்திலும் மொரட்டுவை பிரதேச செயலகப் பிரிவிலும் நடாத்தப்பட்டன. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் மேசன்கள், தச்சர்கள் மற்றும் குழாய் பொருத்துனர்கள் என 750 கைவினைஞர்கள் கலந்து கொண்டனர்.

- வட கிழக்கு மாகாணங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பொறியியலாளர்களாகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகவும் கடமைப் புரிகின்றவர்களுக்கு அவர்களது அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்துகொள்வதற்காக ஒரு கருத்தரங்குத் தொடர் நடாத்தப்பட்டது. நிர்மாண தொழில்நுட்பம், நிர்மாணப் பொருட்கள் மற்றும் நடைமுறை நில அளவை மொத்த நிலைய பயன்பாடு என்ற தலைப்புக்களில் தமிழ் மொழி மூலம் 05 பயிற்சி நிகழ்ச்சித்திடங்கள் நடாத்தப்பட்டன. 03 நிகழ்ச்சித்திட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடாத்தப்படடன். அத்தோடு 02 நிகழ்ச்சித்திட்டங்கள் கல்முனையில் நடாத்தப்பட்டன. பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 209 பேர் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டனர்.

**மாஹாபிமாணி - 2013**

“ மாஹாபிமாணி – 2013” விருது வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் அந்தந்த துறைகளில் சிறந்து விளங்கிய கைவினைஞர்களை பாரட்டி வெகுமதிகளை வழங்கும் பொருட்டு 2013 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.










DTET தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற மாகாண கைவினைஞர்கள் போட்டிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு நிர்மாணத்துறையுடன் தொடர்புடைய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் வேண்டப்பட்டனர். விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சை மூலம் பரிசீலிக்கப்பட்டன. அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 20 விண்ணப்பதாரிகள் 6 மணி நேர நடைமுறை தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு ஒவ்வொருவரும் அங்கீகாரம் பெற்ற நடுவர் குழுவினால் தனித்தனியாக அவதானிக்கப்பட்டு மதிப்பிடப்பட்டனர். மேசன், தச்சன் குழாய் பொருத்துனர்கள், மின்னியல் பணியாளர்கள் மற்றும் டைல் பொருத்துனர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகள் மாகாண (COT) மதிப்பீட்டு மையங்களில் நடாத்தப்பட்டன. அத்தோடு உருக்கு பொருத்தல், இரும்பு வளைத்தல் மற்றும் நிறப்பூச்சு தீட்டும் போட்டிகள் கொழும்பில் நடாத்தப்பட்டன.

“மாஹாபிமானி” தேசிய போட்டிகள் நிர்மாணத்துறை கைவினைஞர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் அவர்களை மதிப்பீடு செய்து வெகுமதிகளை வழங்கும் பொருட்டும் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் கௌரவ அமைச்சர் விமல் வீரவன்ச அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய நாடு முழுவதற்கும் பரப்பப்பட்டது.

இறுதிப் போட்டிகள் கொழும்பில் நடைபெற்றன. ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கிய கைவினைஞர்களுக்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சுகததாஸ உள்ளக அரங்கில் 2013 டிசம்பர் மாதம் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

### 5.4.1 வதிவிட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மையம் (CHPD)

வதிவிட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மையம் (CHPD) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) முகாமைத்துவ நியாயாதிக்கத்தின் கீழ் இயங்கும் பலநோக்கு ஒழுக்கவியல் நிறுவனமாகும். இது (CHPD) இல 33, பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தமுல்லை எனும் முகவரியில் அமைந்துள்ளது. தொழில்நுட்பவியராளர்களினதும் தொழில் வல்லுனர்களினதும் தொழில் வளர்ச்சியை இலக்காகக் கொண்ட பாடநெறிகளை (CHPD) நிறுவனம் நடாத்துகின்றது. (CHPD) நிறுவனத்தினால் நடாத்தப்படும் பெறுமதிமிக்க இத் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு கிடைத்துள்ள உயர் நன்மதிப்பு அதன் நிபுணத்துவ ஆற்றலுக்கு சான்று பகர்கின்றது.







#### 5.4.1.1 வதிவிட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மையத்தின் (CHPD) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

வதிவிட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மையம் (CHPD) விசேடமாக நிர்மாணத்துறை முகாமைத்துவம் மற்றும் கணிய அளவீடு எனும் நிர்மாணத்துறையின் இரண்டு பகுதிகளில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு கவனம் செலுத்தி வருகின்றது. நிர்மாணத்துறை முகாமைத்துவம் சார்ந்த பயிற்சி நெறிகள் உயர் நிர்மாண முகாமைத்துவ டிப்ளோமா (DACM) மற்றும் நிர்மாணப் பணிகள் முகாமைத்துவம் (CWM) எனும் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (DACM) பயிற்சி நெறியின் இலக்கு குழுவாக நிறைவேற்று தரத்திலுள்ளவர்கள், பொறியியலாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் நிர்மாணத்துறை முகாமையாளர்கள் ஆகியோர் இனம் காணப்பட்டுள்ளனர். (CWM) முழு நேர பயிற்சி நெறியின் இலக்கு குழுவாக இருப்பவர்கள் பாடசாலை விலகியோரும் நிர்மாணத்துறையில் மேற்பார்வையாளர்களாக இணைவதற்கு விரும்பும் இளம் ஆர்வலர்களும் ஆவர். பகுதி நேர பயிற்சி நெறிகள் நிர்மாண கைத்தொழில் துறைப் பற்றிய கல்வி அறிவோ அல்லது தகமைகளோ அற்ற நிமாணத் துறையில் மேற்பார்வையாளராக வருவதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கணிய அளவீடு தொடர்பான பாட நெறி சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா, உயர் டிப்ளோமா என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பபடநெறியின் இலக்குக் குழுக்களாக நிர்மாணத்துறை ஊழியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உதவி கணிய அளவீட்டாளர்கள் மற்றும் அனுபவமுள்ள ஆர்வலர்கள் ஆகியோர் உள்ளனர். மேலுள்ள இரு துறைகளும் தேசிய தொழில் தகமை (NVQ) பாடத்திட்டம் மூலம் வழிநடாத்தப்படும்.

### 5.4.1.2 நிர்மாணக் கைத்தொழிலில் புதிதாக இணைபவர்களுக்கான பாடநெறிகள்

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் மேற்பார்வையாளர்களுக்கான பாரிய கிராக்கி காணப்படுகின்றது. தகுதிவாய்ந்த மேற்பார்வையாளர்கள் வெளிநாட்டு தொழில் சந்தையில் காணப்படும் அதிக கிராக்கி காரணமாக உள்நாட்டு கைத்தொழில் துறையில் அவர்களை தக்கவைத்துக்கொள்ள முடிவதில்லை. அத்தோடு நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு உள்வாங்கப்படும் புதியவர்களின் போக்கும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே நாட்டில் நிலவுகின்ற வேலையின்மைப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் வளர்ந்து வரும் இக்கைத்தொழில் துறையில் இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும் ஆரம்ப கட்டத்தில் பாடசாலை விலகியோரை மையமாகக் கொண்டு பெறுமதிமிக்க பாடநெறிகளை நடாத்த முடிவு செய்யப்பட்டது. நிர்மாணப் பணிகள் முகாமைத்துவ (CWM) முழு நேரப் பாடநெறி இந்த பாரிய இடைவெளியை நிரப்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5.4.1.3 நிர்மாணப் பணிகள் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

**முழு நேரம்**

நிர்மாணக் கைத்தொழிலில் ஆர்வம் காட்டும் பாடசாலை விலகிய மாணவர்களுக்காக இப்பாட நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு நிர்மாணக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்களுக்கும் இப்பாடநெறி உகந்தது.

இது ஒரு வருட கால பாடநெறியாகும். CHPD நிறுவனத்தில் 05 மாத நிறுவன ரீதியான பயிற்சியையும் 07 மாத கால சேவை முன்னோடிப் பயிற்சியாகவும் இது கொண்டுள்ளது. பாடசாலை விலகியவர்களில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களுக்கு திறமைச் சித்தியும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் அடங்களாக 06 பாடங்களில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் இப்பாடநெறிக்கு தோற்றுவதற்கு தகுதி பெறுகின்றனர். இப்பாடநெறி NVQ மட்டம் 4 இற்கு மேலான நவீன நிர்மாணக் கைத்தொழில் துறையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப்பாடநெறிக்கு வருடாந்தம் 30 பயிற்சியாளர்கள் உள்வாங்கப்படுவர்.

**பாடநெறியின் உள்ளடக்கம்** : நிர்மாணக் கணிதம், நிர்மாணத்துறை முகாமைத்துவம், நிர்மாணத்துறை தொழில்நுட்பம், நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் மற்றும் அளவையியலும் சீர்மைப்படுத்தலும்,

பொறியியல் பொருட்கள், செலவு முகாமைத்துவம், நிர்மாண வடிவமைப்பு, பாதை நிர்மாணிப்பும் பராமரிப்பும், நிர்மாணச் சாதனங்கள் முகாமைத்துவம், தர உத்தரவாதம், BOQ - அளவீடுகள் மற்றும் விலை நிர்ணயம், தொழிற்சாலை பாதுகாப்பு, சுகாதாரமும் சுற்றுச் சூழலும், திட்டமிடல் பணிகள் மற்றும் வளங்கள், நிர்மாணத்துறை ஆங்கிலம்.

**பாடநெறியின் நன்மைகள்:** ICTAD பதிவின் போது தொழில் முனைவோருக்கான முன்னுரிமை, கணிய அளவீட்டு டிப்ளோமா பாடநெறிக்கான நுழைவுத் தகுதி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள், நிர்மாணத்துறையில் தகுதி பெற்ற திறமையான மேற்பார்வையாளராக திகழுதல்.

### 5.4.1.4 தொழிலாளர்களின் தரமுயர்வு தகுதிக்கான மேலதிக பாடநெறிகள்

நிர்மாணப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், நிறைவேற்றுனர்கள் மற்றும் தொழில் முனைவோர்களது தரமுயர்வு தகுதிக்கான மேலதிக பாடநெறிகள் பல வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாடநெறிகளை தொடர்வதற்கு அனுபவமும் தேவையான தகமைகளும் அவசியமாகும்.

**அ. கணிய அளவீட்டு சான்றிதழ் பாடநெறி**

இப்பாட நெறி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வடிவமைப்பு திட்ட வரைவாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்கள் போன்றோரின் நன்மைக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது. நிர்மாணக் கைத்தொழில் துறையில் இரண்டு வருட அனுபவமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளும் இப்பாடநெறியை தொடர்வதற்கு அவசியப்படுகின்றன. இப்பபடநெறி ஆறு மாத காலத்தைக் கொண்டது. (வாரத்தில் ஒரு நாள், மொத்தமாக 24 நாட்கள்)

**பாடநெறியின் உள்ளடக்கம்:** நடுத்தர மற்றும் சிறிய நிர்மாணப் பணிகளின் BOQ தயாரித்தல், விலை மனு ஆவணங்களை தயாரித்தல், மதிப்பீடு மற்றும் செலவு, வேலைத்தளத்தின் தகவல் மற்றும் தொலைதொடர்பு முகாமை. பயிற்சி பாடநெறியின் விடயதானம் NVQ மட்டம் 4 க்கு மேலான தரத்தைக் கொண்டிருத்தல்.

**ஆ. கணிய அளவீட்டு டிப்ளோமா பாநெறி**

இப்பாட நெறி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வடிவமைப்பு திட்ட வரைவாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்கள் போன்றோரின் நன்மைக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது. CHPD நிறுனத்தின் சான்றிதழ் பாடநெறியை பூரணப்படுத்தல், CHPB BOQ மற்றும் மதிப்பீடு செய்தல், NCT QS, NT QS, NVQ மட்டம் 4 மற்றும் அதற்கு சமமான தகைமைகள் இப்பாட நெறியை தொடர்வதற்கு அவசியப்படுகின்றன. இப்பாடநெறி 10 மாதங்களைக் கொண்டதாகும். (வாரத்திற்கு ஒரு நாள், மொத்த நாட்கள் 40). CHPD சான்றிதழ் பெற்றவர்கள் தவிர்ந்த ஏனையவர்களின் பாடநெறி தகமையைப் பரிசோதிப்பதற்கான நுழைவுப் பரீட்சையொன்று நடைபெறும்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:** பாரிய நிர்மாணப் பணிகளுக்கும் சிவில் பணிகளுக்கும் BOQ தயாரித்தல், கேள்விப் பத்திர ஆவணங்களைத் தயாரித்தல், பெறுகை முறைகள், இடைக்கால மதிப்பீடு, வேலைத்தள தகவல் மற்றும் தொடர்பாடல், வேலைத்தள திட்ட வரைவு, வேயைில் ஈடுபடும் குழுக்களுக்கு தலைமைத்துவம் மற்றும் வசதிகளை வழங்கல், கருத்திட்டங்கள். பயிற்சி பாடநெறியின் விடயதானம் NVQ மட்டம் 5 க்கு மேலான தரத்தைக் கொண்டிருத்தல்.

**இ. கணிய அளவீட்டு உயர் டிப்ளோமா பாநெறி**

இப்பாட நெறி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உதவி கணிய அளவீட்டாளர்கள், நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்கள் போன்றோரின் நன்மைக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது. CHPD நிறுனத்தின் டிப்ளோமா பாடநெறியை பூரணப்படுத்தல், CHPB ஆரம்ப மற்றும் பிந்திய ஒப்பந்தம், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் பெற்றுக்கொண்ட கணிய அளவீட்டு டிப்ளோமா ஆகிய தகைமைகள் இப்பாட நெறியை தொடர்வதற்கு அவசியப்படுகின்றன. இப்பாடநெறி ஒரு வருட காலத்தைக் கொண்டதாகும். (வாரத்திற்கு ஒரு நாள், மொத்த நாட்கள் 60).

**பாடநெறியின் உள்ளடக்கம்:** ஒப்பந்த சட்டம், நிர்மாணப் பொருளியல், முகாமைத்துவ அடிப்படைகள், கருத்திட்ட செலவுகள் மற்றும் மதிப்பீடுகளை தயாரித்தல், கருத்திட்ட

செலவுகளை முகாமை செய்தல், கேள்விப் பத்திரங்கள் முன்வைத்தல், ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்தல், மதிப்பிடுதல், வகைப்படுத்தல், உயர் அளவீடு, பெறுகை மற்றும் கேள்விப்

பத்திர மதிப்பீடு, துணை ஒப்பந்தங்களை முகாமை செய்தல், வருமதிகள், நிதி கணக்கியல், கணினி, வேலைத் தளத்தில் பேணவேண்டிய ஒழுக்க விழுமியங்களை கற்பதை பராமரிப்பதற்கும் நிலை நிறுத்துவதற்கும் வசதியளித்தல், பிரச்சினைகளை தீர்த்தல் - தீர்மானம் எடுத்தல், நிர்மாணத்துறை திட்டமிடல் உத்திகள் மற்றும் கருத்திட்டங்கள். பயிற்சி பாடநெறியின் விடயதானம் NVQ மட்டம் 6 க்கு மேலான தரத்தைக் கொண்டிருத்தல்.



**ஈ. மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**நிர்மாணப் பணிகள் முகாமைத்துவம் - பகுதி நேரம்**

நிர்மாணக் கைத்தொழில் துறையில் மற்றும் நிர்மாணப் பணிகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு நன்மை பயக்கும் அடிப்படையில் இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு வருட கால பாடநெறியாகும். இது ஒரு வருட நிறுவன ரீதியான பயிற்சியை மாத்திரம் கொண்டுள்ளது. ஏற்புடைய துறையில் மூன்று வருட அனுபவத்துடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு மேல் கல்வி கற்றுள்ள மாணவர்கள் இப்பாடநெறிக்கு தோற்றுவதற்கு தகுதி பெறுகின்றனர். இப்பாடநெறி NVQ மட்டம் 4 இற்கு மேலான நவீன நிர்மாணக் கைத்தொழில் துறையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

**பாடநெறியின் உள்ளடக்கம்** : நிர்மாணக் கணிதம், நிர்மாணத்துறை முகாமைத்துவம், நிர்மாணத்துறை தொழில்நுட்பம், நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் மற்றும் அளவையியலும் சீர்மைப்படுத்தலும்,

பொறியியல் பொருட்கள், செலவு முகாமைத்துவம், நிர்மாண வடிவமைப்பு, பாதை நிர்மாணிப்பும் பராமரிப்பும், நிர்மாணச் சாதனங்கள் முகாமைத்துவம், தர உத்தரவாதம், BOQ - அளவீடுகள் மற்றும் விலை நிர்னயம், தொழிற்சாலை பாதுகாப்பு, சுகாதாரமும் சுற்றுச் சூழலும், திட்டமிடல் பணிகள் மற்றும் வளங்கள், நிர்மாணத்துறை ஆங்கிலம்.

**பாடநெறியின் நன்மைகள்:** ICTAD பதிவின் போது தொழில் முனைவோருக்கான முன்னுரிமை, கணிய அளவீட்டு டிப்ளோமா பாடநெறிக்கான நுழைவுத் தகுதி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள், நிர்மாணத்துறையில் தகுதி பெற்ற திறமையான மேற்பார்வையாளராக திகழுதல்.

**உ. நிறைவேற்று அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இப்பாடநெறி உயர் தர நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று அதிகாரிகள், கருத்திட்ட முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், கட்டடக் கலைஞர்கள், கணிய அளவீட்டாளர்கள் மற்றும் ஏனைய தொழில் வல்லுனர்களின் நலன் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாடநெறியின் உள்ளடக்கம்** : தொழில் பாதுகாப்பு, வேலைத் தளத்தில் சுகாதாரம் மற்றும் விபத்துத் தடுப்பு, பொறியியல் மதிப்பு மற்றும் நிர்மாணப் பொருளியல், நிர்மாணக் கைத்தொழில் துறைக்கான காப்புறுதி, பிணக்குகள் மற்றும் மத்தியஸ்தம், குழுக்களை கட்டியெழுப்பல் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி, கீழ் நிலை ஊழியர்களின் பயிற்சியும் அபிவிருத்தியும். நிர்மாண சாதனங்களின் முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவம், ஆபத்து முகாமைத்துவம், முகாமைத்துவ எண்ணக்கரு மற்றும் தொழிலாளர் முகாமைத்துவத்தின் அடிப்படை, (ஆரம்ப மற்றும் பிந்திய) விலை மனு நடைமுறைகள், துணை ஒப்பந்ததாரர்கள் முகாமைத்துவம், ஒப்பந்த நிர்வாகத்தின் நிபந்தனைகள், ஒப்பந்த சட்டம், நிர்மாண திட்டமிடல், வலையமைப்பு பகுப்பாய்வு, வளத் திட்டமிடல், நிதித் திட்டமிடல், நிர்மாண திட்டமிடலில் கணினிப் பிரயோகம், முன்னேற்ற கட்டுப்பாடு, தரக் கட்டுப்பாடு, நெனோ தொழில்நுட்பம் மற்றும் நிர்மாணத்துறைக் கைத்தொழில் பிரயோகம்.

**ஊ. Auto CAD 2d & 3D திட மாதிரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இப்பாடநெறி நிர்மாண வடிவமைப்பு நோக்கங்களுக்காக கணினி உதவி வடிவமைப்பு நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான நடைமுறை அறிவை பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாடநெறியின் நன்மைகள்:** தேர்ச்சி மேம்பாடு, குறுகிய காலப் பகுதி, வரையறுக்கப்பட்ட குழுக்கள் மற்றும் தனிப்பட்ட கண்காணிப்பு, பிணக்கு மற்றும் மத்தியஸ்தம் போன்ற துறைகளில் நிபுணத்துவ அறிவைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் அத்தோடு பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

**பாடநெறியின் உள்ளடக்கம்** : CAD க்கு உள்ள தடைகள், AutoCAD பற்றிய அறிமுகம், புவியியல் அமைப்புக்கள், திருத்தும் கருவிகள், அடுக்குகள், AutoCAD உடனான 3D மாதிரிகள் (மேற்பரப்புகள், திடங்கள்)

**எ. மைக்ரோசொப்ட் ஓப்பீஸ் கருத்திட்டம் 2007/2010 பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

இப்பாடநெறி கருத்திட்டப் பணிகளில் மற்றும் அதனோடு தொடர்புடைய பணிகளில் ஈடுபடுவதற்கு இணைவதற்கு ஆர்வமுள்ள ஆர்வலர்களுக்கு கோட்பாட்டு மற்றும் நடைமுறை அறிவை வழங்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாடநெறியின் நன்மைகள்:** தேர்ச்சி மேம்பாடு, குறுகிய காலப் பகுதி, வரையறுக்கப்பட்ட குழுக்கள் மற்றும் தனிப்பட்ட கண்காணிப்பு, பிணக்கு மற்றும் மத்தியஸ்தம் போன்ற துறைகளில் நிபுணத்துவ அறிவைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் அத்தோடு பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:** அறிமுகம், கருத்திட்ட கோப்புக்களை அமைத்தல், பணிகளை உருாக்கல், வளங்களை உருவாக்கல், வளங்களுக்கான பணிகளை ஒதுக்குதல்,

பார்வைகளுடன் வேலையில் ஈடுபடல், திட்ட அட்டவணையை நல்ல முறையில் இயக்குதல், கருத்திட்டங்களை முகாமை செய்தலும் முன்னெடுத்தலும், கருத்திட்ட தகவல்களை பகிர்வு செய்வதும் கண்காணித்தலும்.

**ஏ. வழமையாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் மாறிவரும் கேள்விக்கு ஏற்ற விதத்தில் பல்வேறுபட்ட விசேட கேள்வியுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழமையாக வடிவமைத்து மிகவும் வெற்றிகரமான முறையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் ஆற்றலை CHPD நிறுவனம் கொண்டுள்ளது.

**ஐ. கருத்தரங்குகளும் செயலமர்வுகளும்**

நிர்மாணக் கைத்தொழில் துறையிலுள்ள பல்வேறுபட்ட தொழில் துறைகளின் கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. இவற்றின் முக்கிய தலைப்புக்களாக பழுது நீக்கும் நடைமுறை மற்றும் கேள்வி பதில் அமர்வுகள் என்பன காணப்பட்டன.

**CHPD நிறுவனத்தின் செயல்திறன் - 2013 பின்வருமாறு**

| இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | எதிர்பார்ப்பு பெறுபேறு | | உண்மையான பெறுபேறு | |
|---|---|---|---|---|---|
| | | பாடநெறிகள் | பாடநெறிகள் | பாடநெறிகள் | பாடநெறிகள் |
| 01 | **கணிய அளவீட்டு பாடநெறிகள்** | | | | |
| | ❖ சான்றிதழ் பாடநெறி | 04 | 100 | 04 | 125 |
| | ❖ டிப்ளோமா பாடநெறி | 04 | 100 | 04 | 159 |
| | ❖ உயர் டிப்ளோமா பாடநெறி | 01 | 30 | 01 | 24 |
| | **கணிய அளவீட்டு பாடநெறிகள் - குருநாகல்** | | | | |
| | ❖ சான்றிதழ் பாடநெறி | 01 | - | 01 | 10 |
| | ❖ டிப்ளோமா பாடநெறி | 01 | - | 01 | 32 |
| 02 | **நிர்மாணப் பணிகள் முகாமைத்துவ பாடநெறி** | | | | |
| | ❖ முழு நேரம் | 01 | 25 | 01 | 17 |
| | ❖ பகுதி நேரம் | 01 | 25 | 01 | 25 |
| 03 | **உயர் நிர்மாண முகாமைத்துவ பாடநெறி** | 01 | 25 | - | - |
| 04 | **கணினி பாடநெறிகள்** | | | | |
| | ❖ MS கருத்திட்டம் | 06 | 72 | 02 | 21 |
| | ❖ Auto cad | 06 | 72 | 01 | 07 |
| 05 | **கருத்தரங்குகள்** | 06 | 360 | 05 | 584 |
| 06 | **வழமையாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள்** | - | - | 05 | 166 |

**2013 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம்**

| தொழில் வகை | வருமானம் (மில்) |
|---|---|
| பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் | *18,501,288.00* |
| வாடகைக்கு வசதியளித்தல் மற்றும் இதர | *1,502,563.00* |
| மொத்தம் | *20,003,851.00* |

### 5.5 மனித வள மற்றும் நிருவாகப் பிரிவு

நிர்மாணத்துறைப் பயிற்சி மற்றிம் அபிவிருத்தி (ICTAD) நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் சார்ந்த பொறுப்புக்கள் அதனது பணிப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் அடிப்படைத் தொழிற்பாடுகளாக மனித வள அபிவிருத்தி, மனித வள திட்டமிடல், மனித வளத்தை இனம்காணுவதற்கான தந்திரோபாயங்களை கண்டறிதல், மனித வளப் பாதுகாப்பு, மனித வளத்தின் உற்பத்தித் திறனை கருத்திற் கொண்டு உச்சப் பயனை அடைந்து கொள்வதற்காக பயிற்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள முன்னெடுத்தல், மானிட ஆற்றல் முகாமைத்துவம் மற்றும் மனித வள மூலதன முகாமைத்துவம் என்பனவாகும். நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளும் நிர்வாகமும் சீறான முறையில் இயங்குவதினால் உபாய முறையிலான வர்த்தக மற்றும் செயற்பாட்டு தீர்மானங்களை எடுக்க முகாமைத்துவத்திற்கு முடிந்துள்ளது.

2013.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு பணிப்பாளர் மற்றும் செயற்பாட்டு பணிப்பபாளர் சபை உள்ளடங்களாக மொத்த நிரந்தர ஆளணியினர் 264 உறுப்பினர்கள் ஆவர். 8 பேர் தற்காலிக ஊழியர்கள் ஆவர். ஆகவே நிறுவனத்தின் மொத்த பதவியணி 272 ஆகும்.

2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.12.31 ஆம் திகதி வரையிலான காலத்தின் போது நிறுவனத்திற்கு இருபது 18 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டதுடன், சேவையிலிருந்து எட்டு (08) ஊழியர்கள் இளைப்பாறினார்கள். நிறுவனத்தை விட்டு 14 ஊழியர்கள் விலகியுள்ளனர்.

2013 ஆம் ஆண்டின் போது, சம்பந்தப்பட்ட துறைகளில் ஊழியர்கள் தமது ஆற்றலளவுகளை விருத்தி செய்துகொள்வதற்கும் உயர்த்திக் கொள்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள், உரைகள், கருத்தரங்குகள் என்பவற்றிற்காக அனுப்பப்பட்டனர். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

NAITA நிறுவனத்திலிருந்து குறித்தொதுக்கப்பட்ட பயிலுனர்களைப் பயிற்றுவிக்க நிறுவனத்தினால் இயலுமாகவிருந்தது. தொழில் நுட்பவியலாளர், சுருக்கெழுத்தாளர், கணனி இயக்குனர்கள், வரவேற்பாளர்கள் போன்ற வகுதிகளையே பயிற்சியாளர்கள் சேர்ந்திருந்தனர்.

கேட்போர்கூடம், மாநாட்டு அறைகள், கருத்தரங்கு அறைகள், கதிர்காமம் சுற்றுலா விடுதி ஆகியவற்றை கேள்வுக்கு விட்டதன் மூலம் ரூ. 2,057,582.00 வருமானம் அடையப் பெற்றது.

**2013 ஆம் ஆண்டில் ஆளணி அபிவிருத்தி**
**உள்நாட்டு பயிற்சிகள்**

| | நிகழ்ச்சித்திட்டம் | பெயர் | பதவி | பிரிவு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | GBCSL கூட்டிணைப்பு தொழில்சார் பயிற்சி நெறி | • திருமதி. சீ.எஸ்.கருணாரத்ன<br>• திருமதி டி.டி.சமரவீர | • பிரதிப் பணிப்பாளர்<br>• உதவிப் பணிப்பாளர் | அபிவி ருத்தி<br>ஆலோ சனை | GBCSL செயலகம் | 2013-01-11,12,18,19<br>2013-02-08 |
| 2 | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரப்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | • திரு. பீ.எஸ்.எஸ்.ஹேவகே | பிரதிப் பணிப்பாளர | நிதி | இலங்கை அரசாங்க நிதி மற்றும் கணக்கியல் நிறுவனம் | 2013.01.30 |
| 3 | பேன்தகு நுகர்வு மற்றும் தயாரிப்பு இரண்டாம் சுற்று - இலங்கை | • திரு.எஸ்.கே.எஸ். அமரசேகர | பணிப்பாளர் | அபிவி ருத்தி | தேசிய சுத்தமான தயாரிப்பு மையம் இலங்கை | 2013-02-21,22 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | உள்ளக கணக்காய்வின் வினைத்திறன் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு | • திரு. ஐ.எம்.குணசேகர | உள்ளக கணக்காய்வாளர் | உள்ளக கணக்காய்வு | SLFL | 2013-03-07 |
| 5 | சிறந்த ஆங்கில பேச்சு பாடநெறி | • திருமதி. கே.ஜீ.என்.சந்திரிகா | முகாமைத்துவ உதவியாளர் | CETRC | பிரிடிஷ் கவுன்சில் | 2013-04-19 தொடக்கம் 2013-07-03 |
| 6 | இரண்டாவது CLOB சர்வதேச நிர்மாண ஒன்றுகூடல் - 2013 | • திரு.எஸ்.கே.எஸ். அமரசேகர | பணிப்பாளர் | அபிவிருத்தி | இலங்கை நிர்மாணிப்பாளர்கள் நிறுவனம் | 2013-06-14,15 |
| 7 | சிறந்த ஒழுக்க முகாமைத்துவத்தினுாடாக மனிதவள அபிவிருத்தி | • திருமதி. கே.டி.சி.பீ.அபேசிங்க<br>• திரு. வீ.பீ.குணசிரி | • பிரதிப் பணிப்பாளர்<br>• நிருவாக உத்தி. | நிருவாகம்<br>CETRAC | ஒழுக்காற்று முகாமைத்துவ கற்கைகள் நிறுவனம் | 2013-06-28,29 |
| 8 | தகவல் முகாமைத்துவ பட்டப் பின் படிப்பு டிப்லோமா - 2013 | • திருமதி டப்.கே.வீ.ஜயதிஸ்ஸ | நூலகர் | நிருவாகம் | NILIS | 2013-05-15 |
| 9 | ஒழுக்காற்று முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | • திரு. டப்.ஏ.ஏ.விஜேசிங்க<br>• திரு வீ.பி. குணசிறி | • நிருவாக உத்தி.<br>• நிருவாக உத்தி. | நிருவாகம்<br>CETRAC | அமைச்சு | 2013-08-29,30 |
| 10 | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரப்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | • திருமதிகே.கே.சந்திரகாந்தி<br>• திருமதி பீ.டி.பெரேரா | • முகாமைத்துவ உதவியாளர்<br>• முகாமைத்துவ உதவியாளர் | நிதி | இலங்கை அரசாங்க நிதி மற்றும் கணக்கியல் நிறுவனம் | 2013-09-04,05 |
| 11 | தொழில்நுட்பவியலாளர்களுக்கும் இலத்திரனியலாளர்களுக்குமான செயலமர்வு | • திரு எஸ்.என்.வன்னியாரச்சி | இலத்திரனியலாளர் | நிருவாகம் | CHPD | 2013-09-16 |
| 12 | வேலைத்தளங்களில் பாதுகாப்பான நடைமுறைகள் பற்றிய செயலமர்வு | • திரு எச்.எம்.சோமரத்ன | • ஆலோசகர் | CETRC | CHPD | 2013-10-31 |
| 13 | நீரியல் முறைமைகள் பராமரிப்பு | • திரு எம்.எம்.எம்.கே.பி. மொரெமட | • பயற்சி உத்தியோகத்தர் | OTC | *CETRAC* | 2013-12-14 |
| 14 | FARU சர்வதேச ஆய்வு ஒன்று கூடல் - 2013 | • திருமதி . சீ.எஸ். கருணாரத்ன | • பிரதிப் பணிப்பாளர் | ஆலோசனை சேவைகள் | மொரட்டுவைப் பல்கலைக் கழகம் | 2013-12-14 |

**ஆளணி அபிவிருத்தி - 2013**
**வெளிநாட்டுப் பயிற்சிகள்**

| | நிகழ்ச்சித்திட்டம் | பெயர் | பதவி | பிரிவு | நாடு | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | எக்ஸ்கோன் கண்காட்சி | திரு. பி.ஏ.பி. வீரசேகர<br>திரு. டபிள்யு.என்.ஈ. குரூஸ் | பிரதிப் பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர் | CETRC<br>OTC | இந்தியா<br>இந்தியா | 2013-11- 20 தொடக்கம் 24 ஆம் திகதி வரை |

## 5.6 நிதிப் பிரிவு

### 5.6.1 நிதி ஆண்டு

2013 சனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையக் கூடிய நிதி ஆண்டாகும்.

### 5.6.2 தேறிய வருமானம்

(ICTAD) நிறுவனம் பயிற்சிகளின் செலவுகளை ஈடுசெய்வதற்காக வருமானத்தை ஈட்டுகின்றது. 2013 ஆம் ஆண்டு இந்த வருமானம் பின்வரும் மூலங்களிலிருந்து பெறப்பட்டது உதாரணம்: இயந்திரங்களை வாடகைக்கு விடுதல், ஒப்பந்ததாரர் பதிவு, பாடநெறிக் கட்டணங்கள், வெளியீடுகள் விற்பனை, கருத்தரங்குகள் போன்றவற்றிலிருந்து வருமானம் ஈட்டப்படுகின்றது.

ரூபா 184,881,382.59 தொகை வருமானமாக ஈட்டப்பட்டது.

### 5.6.3 செலவு

ரூபா 44,992,562.88 தொகையிலிருந்து மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மொத்த செலவாக ரூபா 316,153,574.01 இருந்தது.

### 5.6.4 இலங்கை அரசின் பங்களிப்பு (ICTAD)

அரசாங்கத்தின் ஒன்றுதிரட்டப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டவை

ரூபா 27,500,000.00 (மீண்டெழும்)
ரூபா 88,150,000.00 (மூலதனம்)

**நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்புகள்**

### 1.1 பொதுவானவை

நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதற்கான கூட்டிணைப்பு அறிவித்தல் 718/5 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. (ICTAD) நிறுவனம் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது. அது கொழும்பு 07, விஜேராம மாவத்தை, இல 123 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

**1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாட்டின் தன்மையும்**

ICTAD இன் நோக்கம் எமது நாட்டின் தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்காக தேசிய கொள்கைகளினதும் எதிர்பார்ப்புக்களினதும் வரையறைக்குள்ளால் பயிற்சிகள், நிபுணத்துவ ஆற்றல் , நிர்மாணத்துறை சார்ந்த தர உத்தரவாதம் என்பனவற்றுக்கான வசதியளிப்பையும் ஒழுங்குமுறைகளையம் அபிவிருத்தி செய்தலாகும்.

**1.3 ஆளணி எண்ணிக்கை**

2012 ஆம் ஆண்டின் 260 ஆளணியினருடன் ஒப்பீட்டு நோக்கும் போது 2013 டிசம்பர் 31 ஆம் திகதி மொத்த ஆளணியினர் எண்ணிக்கை 262 ஆகும்.

**1.4 நிதி ஆண்டு**

2013 சனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையக் கூடிய 12 மாதங்களைக் கொண்ட நிதி ஆண்டாகும்.

**2. குறிப்பிடத்தக்க நிதிக் கொள்கைகள்**

**2.1 நிதி அறிக்கை தயாரிப்பின் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டவை**

ICTAD நிறுவனத்தின் நிதி அறிக்கை ஒரு வரலாற்று செலவுக்கு அமைய இலங்கை ரூபாய் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.2 நிதி அறிக்கை பதிவுகள்**

ICTAD நிறுவனத்தின் நிதி அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது கணக்கு பதிவு தர நிலமைகள் நடைமுறைகளுக்கு எற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. *(SLPSAS)*

**2.3 சொத்துக்களும் மதிப்பீட்டின் அடிப்படைகளும்**

**2.3.1** ஆதனம், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவுகள் நிதி அறிக்கையில் குறை தேய்மானத்தை பதிவு செய்துள்ளன.

ஆதனம், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவுகள் ஏதேனும் சந்தர்ப்பச் செலவுகளுடன் கூடிய மறு மதிப்பீட்டு பெறுமதிகள் அல்லது கொள்வனவுச் செலவுகள் என்பவற்றைக் குறிக்கும்.

**2.3.2** சகல ஆதனங்கள், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவையும் தள்ளுபடி செய்வதற்கு அவற்றின் எஞ்சிய பெறுமானங்களின் சிறந்த பாவனைக்காக வேண்டி பெறுமானத் தேய்வு நேரக வரி முறையை அடிப்படையாகக் கொண்டு சமமான தவணைக் கட்டணங்களாக கணக்கிடப்பட்டன. 2013 ஆம் ஆண்டிலிருந்து செல்லுபடியாகும் விகிதங்கள் பின்வருமாறு

| விடயம் | ஆயுள் காலம் | விகிதம் (%) |
|---|---|---|
| காணி | | 0.0 |
| கட்டிடங்களும் கட்டிடங்கள் மேம்படுத்தலும் | 40 | 2.5 |
| தளபாட பொருத்தல்கள் மற்றும் அலுவலக சாதனங்கள் | 5 | 20.0 |
| இயந்திர சாதனங்கள் | 8 | 12.5 |
| ஆடியோ விஷுவல் சாதனங்கள் | 4 | 25.5 |
| கருவிகளும் சாதனங்களும் | 5 | 20.0 |
| மோட்டார் வாகனங்கள் | 8 | 12.5 |

ஆதனங்கள், ஆலை மற்றும் கருவிகளின் தேய்மானக் கட்டணங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டன. மேலும் அவைகள் பாவனையில் உள்ள நிலையிலேயே அவற்றின் தேய்மானங்கள் கணக்கிட ஆரம்பிக்கப்பட்டன. நிரந்தரக் காணிகளுக்கு தேய்மானம் வழங்கப்படவில்லை.

**2.4 பொருட் பதிவேடு**

உதிரிப் பாகங்கள், பராமரிப்புப் பொருட்கள், சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் காகிதாதிகள் என்பன பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படும். சராசரி செலவு அடிப்படையில் அவை பதியப்படும்.

**2.5** குறிப்பிட்ட காணிக்கான குத்தகை வாடகை குத்தகை காலத்தில் சம தவணைகளில் தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.6** 2010 ஆம் ஆண்டு CHDP கட்டிடத்தின் சொத்துக்கள் அமைச்சிடமிருந்து எடுக்கப்பட்டன. அச் சொத்துக்களின் பெறுமதிகள் 2013 ஆம் ஆண்டு கணக்கிற்கு எடுக்கப்பட்டன.

**2.7** 2013 ஆம் ஆண்டு GIZ இன் சொத்துக்கள் அமைச்சிடமிருந்து எடுக்கப்பட்டன. அச் சொத்துக்களின் பெறுமதிகள் 2013 ஆம் ஆண்டு கணக்கிற்கு எடுக்கப்பட்டன.

**2.8 வரவுகள்**

பெறமுடியாத ஐயக் கடன்களினது தேறிய எற்பாடுகளை மதிப்பீடு செய்து உணர்வதற்காக வரவுகளின் பெறுமாணங்கள் அறிக்கையிடப்பட்டன.

2010.12.31 திகதி வரைக்குமான கடனாளிகளின் கணக்குகளை தீர்வு செய்வதற்காக அவை தீர்வை கணக்கிற்கு மாற்றப்பட்டன.

**2.9 கிடைக்கப் பெறாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்**

கிடைக்கப் பெறாத மற்றும் ஐயக் கடன்கள் கணக்கிடப்பட்டு பின்வருமாறு கணக்குகளில் காட்டப்படுகின்றன.

| **2.10 தீர்க்கப்படாத காலம்** | **மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்** |
|---|---|
| 12 மாதங்களுக்கு குறைவானவை | இல்லை |
| 1 வருடம் முதல் 2 வருடம் வரை | 5% |
| 2 வருடம் முதல் 3 வருடம் வரை | 5% |
| 3 வருடம் முதல் 4 வருடம் வரை | 5% |
| 4 வருடம் முதல் 5 வருடம் வரை | 5% |
| 5 வருடங்களுக்கு மேற்பட்டவை | 100% |

## 2.11 காசு மற்றும் காசு மாற்றீடுகள்

காசு மற்றும் காசு மாற்றீடுகள் மூதலீடுகள், காசு கையிருப்பு மற்றும் வங்கி இருப்பு என்பவற்றைக் கொண்டிருக்கும்.

## 2.12 நானாவித வருமானம்

பொதுத் திறைசேரியிலிருந்து மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட மூலதன நிதி ஒதுக்கீடுகள் நானாவித வருமானத்திற்குள் உள்ளடக்கப்படும்.

மூலதன ஒதுக்கீடுகள் நானாவித வருமானங்கள் என்ற அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்றன. அவை சொத்துக்களின் சிறந்த பாவனையைப் பொறுத்து முறையான மற்றும் பகுத்தறிவு ரீதியான ஒரு வருமானமாக கொள்ளப்பட்டது.

## 2.13 ஓய்வூதிய பணிக் கொடைகளுக்கான ஒதுக்கீடுகள்

நிறுவனம் வருடாந்தம் ஊழியர்களுக்கான பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகளை செய்து வருகின்றது. இது பொறுப்புக்கள் என்ற அடிப்படையில் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. நிரந்தர ஊழியர் ஒருவர் பூரணமாக பூர்த்தி செய்யும் ஒவ்வொரு வருடத்தினதும் ஆகக் குறைந்தது ஒரு மாத சம்பளத்தின் அரை பங்கு வருடாந்த மதிப்பீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஊழியரது அரம்ப வருடத்தில் வரையப்பட்ட சம்பளம் இங்கு பணப் பெறுமதிக்காக கொள்ளப்படுகின்றது. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய தொடர்ச்சியான 5 வருட சேவைக் காலத்தைக் கொண்ட ஊழியர்களே அதற்கு தகுதி பெறுகின்றனர்.

## 2.14 அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள்

### 2.14.1 மீண்டெழும் ஒதுக்கீடுகள்

அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மீண்டுவரும் ஒதுக்கீடுகள் ICTAD நிறுவனத்தினது வருமான அறிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 2.14.2 மூலதன ஒதுக்கீடுகள்

அரசாங்கத்திடமிருந்து காசாக கிடைக்கப்பெற்ற மூலதன ஒதுக்கீடுகள் நானாவித வருமானங்கள் என்ற அடிப்படையில் கிடைக்கப் பெற்றன. அவை சொத்துக்களின் சிறந்த பாவனையைப் பொறுத்து முறையான மற்றும் பகுத்தறிவு ரீதியான ஒரு வருமானமாக கொள்ளப்பட்டது.

## 2.15 வருவாய் அங்கீகாரம்

நிறுவனம் பின்வரும் மூலங்களிலிருந்து வருமானத்தை ஈட்டுகின்றது. வருமானம் சேர் அடிப்படையிலான கணக்கு நோக்கங்களுக்காக இத்தகைய வருமானங்களை அங்கீகரிக்கின்றது.

(அ) இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்
(ஆ) பாடநெறிக் கட்டணங்கள்
(இ) வெளியீடுகள் விற்பனை
(ஈ) கேட்போர் கூடம், மாநாட்டு அறை, கருத்தரங்கு அறைகள் வாடகை
(உ) கருத்தரங்குகளும் செயலமர்வுகளும்

**2.16 செலவு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை கணக்கு விதிகளுக்கு ஏற்ப வருமான சேர் அடிப்படையில் அனைத்து செலவுகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**2.17 ஒட்டு மொத்த செலவுகளை சரி செய்தல்**

ரூபா 85,198,127.06 க்கான செலவுகள் ஒட்டு மொத்த செலவுக் கணக்கில் சரி செய்யப்பட்டது.

**2.18 சட்ட நடவடிக்கைகள்**

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தின் தொழில் நியாய சபையிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையில் உள்ளன.

**2.19 நிதிக் கொள்கை மாற்றம் பற்றிய மீளாய்வு விண்ணப்பம்**

பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளின் நிதிக் கொள்கையில் 2012 ஆம் ஆண்டு மாற்றம் ஏற்பட்டது. முன்னைய வருடங்களில் ICTAD நிறுவனம் மூலதன மற்றும் மீண்டெழும் ஒதுக்கீடுகளை ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைத்து வந்தது. ஆனால் தற்போது ICTAD நிறுவனம் கணக்கு நடைமுறைகளுக்கு அமைய மூலதன ஒதுக்கீடுகளை நானாவித வருமானங்கள் கணக்கிலும் மீண்டெழும் ஒதுக்கீடுகளை பிற வருமானங்கள் கணக்கிலும் பதிவதற்கு தீர்மானித்துள்ளது.

கணக்கு கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் 2012 நடைமுறைக் கணக்கிலும் ஒப்பீட்டு அறிக்கையிலும் விளக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| விபரம் | | 2012 இலிருந்து ரூபா. |
|---|---|---|
| நானாவித வருமானத்தில் அதிகரிப்பு | 1,440,068,039.84 | |
| பிற வருமானத்தில் அதிகரிப்பு | 764,440,796.46 | |
| உபரி அதிகரிப்பு | | 2,204,508,836.30 |
| ஒதுக்கீட்டுக் கணக்கு குறைப்பு | (2,204,508,836.30) | |
| ஒதுக்கீட்டுக் கணக்கு குறைப்பு | (282,241,548.88) | (2,486,750,385.18) |
| நானாவித வருமானத்தில் அதிகரிப்பு | | 282,241,548.88 |

**2.20 JBIC கருத்திட்டம்**

JBIC கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. அதன் படி கருத்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் 2013 ஆம் ஆண்டு ICTAD நிறுவனத்தின் கணக்குக்கு எடுக்கப்பட்டது.

**நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**

**இறுதிக் கணக்கு - 2013**

**உள்ளடக்கம்**

நிதி நிலமை பற்றிய அறிக்கை

நிதி முன்னேற்றம் பற்றிய அறிக்கை

நிகர சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய அறிக்கை

நிதிப் பாய்ச்சல் அறிக்கை

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**
**2013.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை**
**2013 ஆம் ஆண்டு டிசம்பர் .31 ஆம் திகதியன்று** (மீளமைக்கப்பட்டது)

| விவரணம் | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **மீண்டுவரும் சொத்துக்கள்** | | | |
| காசு கையிருப்பு | 1 | 5,837,816.16 | 15,292,433.50 |
| முதலீடுகளும் திறைசேரி உண்டியல்களும் | 2 | 15,707,803.20 | 15,707,803.20 |
| தொழிலும், வேறு கிடைக்க வேண்டியவைகளும் | 3 | 37,850,124.96 | 23,873,491.41 |
| கையிருப்புக்கள் | 4 | 147,851,060.57 | 194,121,234.96 |
| முன்- கொடுப்பனவுகள் | | 1,038,991.63 | 1,004,193.67 |
| | | **208,285,796.52** | **249,999,156.74** |
| நடந்து கொண்டிருக்கம் மூலதன வேலை | | 33,196,408.61 | 22,163,160.50 |
| **மீண்டுவராத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி, சாதனங்கள் | 5 | 620,369,481.47 | 455,320,170.94 |
| **மொத்த சொத்துக்கள்** | | **861,851,686.60** | **727,482,488.18** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன்வழங்குனர்களும், திரண்டவைகளும் | 6 | 70,058,967.21 | 70,025,612.22 |
| | | **70,058,967.21** | **70,025,612.22** |
| **நடைமுறை சாராத பொறுப்புக்கள்** | | | |
| கொடுப்பனவுக்குரிய பணிக்கொடைக்கான ஏற்பாடு | 7 | 58,306,766.50 | |
| மீளளிக்கத்தக்க வெளிநாட்டு உதவி | | 2,663,658.98 | 2,663,658.98 |
| | | **60,970,425.48** | **58,346,020.48** |
| **மொத்த ஒப்புரவும், பொறுப்பும்** | | **131,029,392.69** | **128,371,632.70** |
| **நிகர சொத்துக்கள்** | | **730,822,293.91** | **599,110,855.48** |
| **நிகர சொத்துக்கள் / பங்குகள்** | | | |
| அரசாங்கத்திலிருந்து வாக்களிக்கப் பட்ட நிதியங்கள் | 8 | 371,215,686.51 | 55,682,361.50 |
| அரசாங்க மானியம் | 9 | 271,556,720.38 | 224,604,675.82 |
| மீள் மதிப்பிடல் - நிரந்தர சொத்துக்கள் | | 259,369,929.03 | 78,295,000.00 |
| பற்றாக்குறை | | (171,320,042.01) | (70,505,081.09) |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ பங்குகள்** | | **730,822,293.91** | **599,110,855.48** |

குறிப்பிடத்தக்க நிதிக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் பக்கம் 06 தொடக்கம் 21 வரை இந்த நிதி அறிக்கையில் நேர்மையாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**உறுதிப்படுத்தல்**

2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குரிய 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆணடுக்கான அதன் மிகை / (பற்றாக்குறை) பற்றிய மேற்குறிப்பிட்ட நிதி அறிக்கை சரியானது என்றும் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்

**பீ.எஸ்.ஹேவகே** — **பணிப்பாளர் (நிதி) (பதில் கடமை)**

**கட்.கலைஞர் எச்.கே.பாலச்சந்திரா** — **பணிப்பாளர் நாயகம்**

இந்த நிதி அறிக்கையை தயாரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் முகாமைத்துவக் குழு பொறுப்பாக உள்ளது
இந்த நிதி அறிக்கையை முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் சார்பாக ஒப்பமிடப்பட்டது.

**கட்.கலைஞர் அநுர தஸநாயக்க** — **தவிசாளர் மற்றும் குழு அங்கத்தவர்**

**எச்.ஆர்.வீ.பி.விஜேவர்தன** — **குழு அங்கத்தவர்**

**2014 டிசம்பர் 2014**

| **நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**<br>**2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி முன்னேற்றம்**<br>(மீளமைக்கப்பட்டது) | | | |
|---|---|---|---|
| **விவரணம்** | குறிப்பு | **2013**<br>**ரூபா** | **2012**<br>**ரூபா** |
| வருமானம் | 11 | 174,419,915.46 | 153,368,156.87 |
| கழிக்குக: | | | |
| வருமான தோற்றுவிப்புச் செயற்பாடுகளின் செலவினங்கள் | 12 | 195,288,458.05 | 168,543,782.04 |
| **லாபம்/(நஷ்டம்) வருமானத் தோற்றுவிப்பு** | | (20,868,542.59) | (15,175,625.17) |
| திறைசேரி உதவு தொகை - CETRAC | | 17,900,000.00 | 10,800,000.00 |
| திறைசேரி உதவு தொகை - OTC | | 6,900,000.00 | 1,800,000.00 |
| திறைசேரி உதவு தொகை – பராமரிப்பு | | 23,340,000.00 | 8,100,000.00 |
| | | 27,271,457.41 | 5,524,374.83 |
| திறைசேரி உதவுதொகை – மீளவரும் | | 27,500,000.00 | 26,450,000.00 |
| வேறு வருமானம் | 13 | 46,369,011.37 | 11,965,431.20 |
| கழிக்குக: | | | |
| நிருவாகச் செலவினங்கள் | 14 | 48,856,149.00 | 41,601,997.89 |
| வேறு செலவினங்கள் | 15 | 29,007,082.32 | 23,099,208.84 |
| நிதி ஆகுசெலவு | | 111,770.01 | 99,492.82 |
| **மதிப்பிறக்கத்திற்கான ஏற்பாட்டுக்கு முன்னரான லாபம்/(நஷ்டம்)** | | 23,165,467.45 | (20,860,893.52) |
| கழிக்குக: | | | |
| மதிப்பிறக்கம் | | 44,992,562.88 | 66,092,204.45 |
| சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாட்டுகளுக்கான முன்னரான லாபம;/(நஷ்டம்) | | (21,827,095.43) | (86,953,097.97) |
| கழிக்குக: | | | |
| கிடைக்காததும், சந்தேகத்திற்குரியதுமான கடன்களுக்கான | | (2,102,448.25) | (8,194,952.54) |
| ஏற்பாட்டுகளுக்கான காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம் | | (19,724,647.18) | (78,758,145.43) |

**நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**

**2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி முன்னேற்றம்**

(மீளமைக்கப்பட்டது)

| | பற்றாக்குறை ரூ. | மீள் மதிப்பிடு செய்யப்பட்ட சொத்துக்கள் ரூ | மானியம் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|
| 2011.12.31 ஆம் திகதிக்கு மீதி | (2,196,255,771.96) | | 2,758,464,150.97 | 562,208,397.01 |
| நிதிக் கொள்கை மாற்றங்கள் | | | | |
| மீளமைக்கப்பட்ட மீதி | (2,196,255,771.96) | | 2,758,464,150.97 | 562,208,397.01 |
| **2012 ஆம் ஆண்டு நிகர சொத்துக்கள் / பங்குகளின் மாற்றம்** | | | | |
| நிதிக் கொள்கை மாற்றங்கள் | 2,204,508,836.30 | | (2,204,508,836.30) | |
| மீள்மதிப்பீடு | | 78,295,000.00 | | 78,295,000.00 |
| | 8,253,064.34 | 78,295,000.00 | 553,955,314.67 | 640,503,397.01 |
| பற்றாக்குறை | (78,758,145.43) | | | (78,758,145.43) |
| பல்லின வருமானங்கள் - திறைசேரி மானியங்கள் | | | 37,365,621.90 | 37,365,621.90 |
| **2012.12.31 ஆம் திகதிக்கு மீளமைக்கப்படட மீதி** | **(70,505,081.09)** | **78,295,000.00** | **591,320,936.57** | **599,110,855.48** |
| கணக்கு மதிப்பீடுகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் | (81,090,313.74) | | | (81,090,313.74) |
| | (151,595,394.83) | 78,295,000.00 | 591,320,936.57 | 518,020,541.74 |
| பற்றாக்குறை | (19,724,647.18) | | | (19,724,647.18) |
| மானியம் | | | 46,952,044.56 | 46,952,044.56 |
| பல்லின வருமானங்கள் - திறைசேரி மானியங்கள் | | | 4,499,425.76 | 4,499,425.76 |
| மீள்மதிப்பீடு | | 181,074,929.03 | | 181,074,929.03 |
| **2012.12.31 ஆம் திகதிக்கு முன் கொண்டு சென்ற மீதி** | **(171,320,042.01)** | **259,369,929.03** | **642,772,406.89** | **730,822,293.91** |

**நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**

**2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலத்திற்கான பணப் புழக்க கூற்றின் மறைமுகமான முறை**

(மீளமைக்கப்பட்டது)

| விவரணம் | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| சாதாரண செயற்பாடுகளிலிருந்து மேன்மிகை/(பற்றாக்குறை) | (19,724,647.18) | (78,758,145.43) |
| **பணம்சாரா பெயர்ச்சிகள்** | | |
| மதிப்பிறக்கம் | 44,759,949.24 | 66,092,204.45 |
| குத்தகைக் கூலி | 232,613.64 | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 5,602,988.75 | 4,460,705.75 |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | (1,593,439.69) | (1,675,520.73) |
| ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணங்களினதும் விற்பனை மீதான (ஆதாயங்கள்)/நஷ்டங்கள் | | (3,143,281.31) |
| ஐயக் கடன் ஒதுக்கீடுகள் | (2,102,448.25) | (8,194,952.54) |
| பல்வேறுபட்ட வருமானங்கள் | (35,510,574.24) | (2,484,378.10) |
| முன்னைய வருட சரிசெய்கைகள் | (250,467.35) | |
| **மூலதன மாற்றீடுகளுக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம் (நட்டம்)** | **(8,586,025.08)** | **(23,703,367.91)** |
| கொடுப்பனவுகளின் அதிகரிப்பு (குறைவு) | 9,346,610.78 | 38,062,996.01 |
| வேறு நடைமுறை சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைப்பு | (5,327,423.97) | 10,782,634.06 |
| **செயற்பாட்டின் மூலம் ஈட்டப்பட்ட பணம்** | **(4,566,838.27)** | **25,142,262.16** |
| பணிக்கொடை கொடுப்பனவு | (2,978,583.75) | (3,979,422.00) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து நிகர பணம்** | **(7,545,422.02)** | **21,162,840.16** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் பணப்புழக்கம்** | | |
| பொறிகளினதும், உபகரணங்களினதும் கொள்வனவு | (40,000,192.49) | (66,272,252.11) |
| பொறிகளினதும், உபகரணங்களினதும் விற்பனையிலிருந்து வரும்படிகள் | | 3,143,281.31 |
| வட்டி வருமானம் திறைசேரி உடன்உண்டியல்கள் | 1,624,108.50 | 1,589,745.15 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | **(38,376,083.99)** | **(61,539,225.65)** |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| திறைசேரி உதவுதொகை | 40,010,000.00 | 39,850,000.00 |
| நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம் | **40,010,000.00** | **39,850,000.00** |
| பணத்திலும், பண சமப்படுத்தல்களிலும் நிகர பண அதிகரிப்பு (குறைப்பு) | (5,911,506.01) | (526,385.49) |
| காலத்தின் ஆரம்பத்தில் பணமும், பணச் சமப்படுத்தல்களும் | 11,749,322.17 | 12,275,707.66 |
| *காலத்தின் இறுதியில் பணமும், பணச் சமப்படுத்தல்களும் | **5,837,816.16** | **11,749,322.17** |

## 1. நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்புகள்

### 1.1 பொதுவானவை

நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதற்கான கூட்டிணைப்பு அறிவித்தல் 718/5 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. (ICTAD) நிறுவனம் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது. அது கொழும்பு 07, விஜேராம மாவத்தை, இல 123 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

ICTAD இன் நோக்கம் எமது நாட்டின் தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்காக தேசிய கொள்கைகளினதும் எதிர்பார்ப்புக்களினதும் வரையறைக்குள்ளால் பயிற்சிகள், நிபுணத்துவ ஆற்றல் , நிர்மாணத்துறை சார்ந்த தர உத்தரவாதம் என்பனவற்றுக்கான வசதியளிப்பையும் ஒழுங்குமுறைகளையம் அபிவிருத்தி செய்தலாகும்.

### 1.3 ஆளணி எண்ணிக்கை

2012 ஆம் ஆண்டின் 260 ஆளணியினருடன் ஒப்பீட்டு நோக்கும் போது 2013 டிசம்பர் 31 ஆம் திகதி மொத்த ஆளணியினர் எண்ணிக்கை 262 ஆகும்.

### 1.4 நிதி ஆண்டு

2013 சனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையக் கூடிய 12 மாதங்களைக் கொண்ட நிதி ஆண்டாகும்.

## 2. குறிப்பிடத்தக்க நிதிக் கொள்கைகள்

### 2.1 நிதி அறிக்கை தயாரிப்பின் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டவை

ICTAD நிறுவனத்தின் நிதி அறிக்கை ஒரு வரலாற்று செலவுக்கு அமைய இலங்கை ரூபாய் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2 நிதி அறிக்கை பதிவுகள்

ICTAD நிறுவனத்தின் நிதி அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது கணக்கு பதிவு தர நிலமைகள் நடைமுறைகளுக்கு எற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. *(SLPSAS)*

**சொத்துக்களும் மதிப்பீட்டின் அடிப்படைகளும்**

**2.3.1** ஆதனம், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவுகள் நிதி அறிக்கையில் குறை தேய்மானத்தை பதிவு செய்துள்ளன.

ஆதனம், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவுகள் ஏதேனும் சந்தர்ப்பச் செலவுகளுடன் கூடிய மறு மதிப்பீட்டு பெறுமதிகள் அல்லது கொள்வனவுச் செலவுகள் என்பவற்றைக் குறிக்கும்.

